www.padippakam.com

அக்டோபர் 2003 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்





# பயங்கரவாத பீதியில் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள்

எந்தவொரு பயங்கரவாதக் குழுவையும் சாராத
ஒரு சாமானியத் தொழிலாளர் குடும்பம்
மும்பை குண்டு வெடிப்பு போன்ற எதிர்-பயங்கரவாதத்
தாக்குதலை நடத்தியுள்ளது. இத்தகைய போக்கு
இந்து மதவெறி பாசிச பார்ப்பன பயங்கரவாதிகளிடையே
அதிர்ச்சியையும் பயபீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

www.padippakam.com




''வேலை நிறுத்த உரிமை பறிப்பை முறியடிப்போம்! பொடா, எஸ்மா, டெஸ்மா மற்றும் நீதிமன்ற பாசிசத்தைத் தகர்ப்போம்!''

## – புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சார இயக்கம்

தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டம் பாசிச ஜெயா அரசால் கொடூரமாக ஒடுக்கப்பட்டது. இந்த ஒடுக்குமுறைகளை 'முன்னுதாரமிக்க நடவடிக்கை' என்று உச்ச நீதிமன்றம் பாராட்டியுள்ளதோடு 'வேலை நிறுத்தம் செய்ய தொழிலாளர்களுக்கு உரிமையில்லை' என்றும் அறிவித்துள்ளது. தேசிய கட்சிகள், மாநிலக் கட்சிகள் உட்பட எல்லா ஓட்டுக் கட்சிகளும் உச்ச நீதிமன்றத்தின் இந்த அறிவிப்புக்கு தங்கள் அதிருப்தியை வெளிக்காட்டிக் கொண்டதோடு அமைதியாகி விட்டன.

இந்நிலையில், ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் மட்டுமே பொடா, எஸ்மா, டெஸ்மா மற்றும் நீதிமன்றத்தின் பாசிசத்தை அம்பலப்படுத்தி வருகின்றன. கடந்த மூன்று மாதங்களாக, 'பாசிச ஜெயாவை ஜெயிக்க முடியாதா?' என்ற வெளியீட்டின் மூலமும், துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் முதலான பல வழிகளிலும் தொடர் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெய்வேலி, திருச்சி, உசிலம்பட்டி, ஆரியப்பட்டி, மதுரை, கம்பம், உடுமலை, கோவை, ஈரோடு, சீர்காழி, தஞ்சை, கோத்தகிரி, சென்னை, திருவெண்ணெய் நல்லூர், சங்கராபுரம், விழுப்புரம், சேலம், ஜெயங்கொண்டம், கும்பகோணம், சிவகங்கை, நாகர்கோவில், விருதுநகர், திருநெல்வேலி ஆகிய ஊர்களில் 28 பொதுக் கூட்டங்களும், 4 அரங்கக் கூட்டங்களும் பல்வேறு தடைகளை மீறி நடத்தப்பட்டுள்ளன.

அரசு ஊழியர் - ஆசிரியர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு உழைக்கும் மக்கள் மத்தியிலும், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும், பாசிச இருள் கவிந்துள்ள இச்சூழலில் மேற்கண்ட புரட்சிகர அமைப்புகளின் பிரச்சார இயக்கம் புதிய நம்பிக்கை ஒளிக்கீற்றைப் பாய்ச்சியுள்ளன.

**மதுரை** - ஜெய்ஹிந்த்புரத்தில் ஜூலை 28-ஆம் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டம் - கலைநிகழ்ச்சிக்கு 2000-க்கும் அதிகமான மக்கள் திரண்டிருந்தனர். பெரிய ஓட்டுக் கட்சிகள் நடத்தும் கூட்டத்திற்கே இவ்வளவு பேர் உணர்வுபூர்வமாக திரண்டு இறுதி வரை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில்லை என்று வந்திருந்த மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பாராட்டினார்கள்.

கோவை - சாய்பாபா காலனியில் ஆகஸ்டு 7-ஆம் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ம.க.இ.க., மாநில இணை செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார். ''பஞ்சாலைகளை மூடி ஒரு லட்சம் தொழிலாளர்களைப் பட்டினிக்குத் தள்ளியது அல்-உம்மாவா? அமெரிக்காவா?'' என்ற கேள்வியுடன் தொடங்கி, ஜெயலலிதா மற்றும் நீதிமன்றங்களின் பாசிசத் தன்மையை அம்பலப்படுத்தினார்.

**உடுமலைப்பேட்டையில்** 27.08.2003 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கோவை ம.க.இ.க. செயலர் தோழர் மணிவண்ணன் தலைமையேற்க, உசிலை வட்ட வி.வி.மு. தோழர் சிவகாமு சிறப்புரையாற்றினார். இறுதியில் நடைபெற்ற மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி திரண்டிருந்த மக்களிடையே எழுச்சியை விதைத்தது.

**திருப்பத்தூரில்** ஆகஸ்டு மாதம் 7-ஆம் தேதி விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் பொதுக்கூட்டம் நடத்த போலீசிடம் அனுமதி கேட்டிருந்தனர். போலீசு தொடர்ந்து அனுமதி மறுத்து வரவே ஆகஸ்டு 23-ஆம் தேதி தோழர் பெரியசாமி தலைமையில், போலீசு அனுமதி பெறாமல் பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்தனர். கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் அங்கு வந்த போலீசு, தோழர்களைக் கைது செய்து, பொதுக்கூட்டத்திற்கு வைத்திருந்த தட்டிகள்-பேனர்களை அடித்து நொறுக்கியது. இக்கைது மற்றும் போலீசின் அராஜகத்தைக் கண்டித்து வி.வி.மு. தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது.

**சென்னை** பாரிமுனையில் உள்ள ஏ.கே.நாயக் பவனில் பு.ஜ.தொ.மு. தோழர் லோகநாதன் தலைமையேற்க செப்டம்பர் 25-ஆம் தேதி அரங்கக் கூட்டம் நடைபெற்றது. ம.க.இ.க. தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார். நீதிமன்றங்கள் 1947-லிருந்தே பல்வேறு வழக்குகளில் வழங்கி வந்துள்ள தீர்ப்புகளின் பாசிசத் தன்மையை அம்பலப்படுத்தும் விதமாக தோழரின் உரை அமைந்திருந்தது.

●

*அன்பார்ந்த வாசகத் தோழர்களே,*

***இந்த இதழோடு உங்கள் புதிய ஜனநாயகம் இதழ் 18-வது ஆண்டை நிறைவு செய்கிறது. நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் புதிய ஜனநாயகம் நடத்திவரும் போராட்டத்துக்கு உறுதியான ஆதரவளித்து வரும் உங்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது ஊக்கமான ஆதரவையும் உறுதியான ஒத்துழைப்பையும் அடித்தளமாகக் கொண்டு 19-வது ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.***

*— ஆசிரியர் குழு.*


படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 18
இதழ் 12
அக்டோபர் 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

# உச்சநீதி மன்ற பாசிசத்தின் புதிய வெளிப்பாடு

உச்சநீதி மன்றம் சமீபத்தில் வெளியிட்டுள்ள தீர்ப்புகள், கருத்துகள் மீண்டும் அதன் பாசிசப் போக்கை உறுதிப்படுத்தியிருக்கின்றன. ''பொடா'' சட்டத்தின் கீழ் பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நக்கீரன் கோபாலுக்கு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியிருந்த பிணை உத்திரவை இரத்து செய்து விட்டது உச்சநீதி மன்றம். அரசு ஊழியர்களின் வேலைநிறுத்த உரிமையை மறுக்கும் தனது தீர்ப்பை மறு ஆய்வு செய்ய மறுத்துவிட்டது. அயோத்தி பாபரி மசூதி இடிப்பு வழக்கில் ஆர்.எஸ்.எஸ். பாசிசக் குற்றவாளிகளுக்குச் சாதகமாக அடுத்தடுத்த தீர்ப்புகள் வழங்கி வருகிறது. அவர்களின் முக்கியக் கொள்கையாகிய பொது சிவில் சட்டம் அவசியமானதுதான் என்று கருத்துக் கூறியிருக்கிறது. குஜராத் கலவர வழக்குகளில் நரேந்திர மோடி அரசுக்கு கண்டனம் தெரிவித்தபோதும், அதற்குச் சாதக மான இறுதித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நக்கீரன் பத்திரிக்கையின் உடமையாளரும் ஆசிரியருமான கோபால் மீது பழி வாங்கும் நடவடிக்கையாகத்தான் ஜெயலலிதா அரசு ''பொடா'' உட்பட பல பொய் வழக்குகள் போட்டுச் சிறையிலடைத்துள்ளது. இந்த உண்மையைப் புரிந்து கொள்வ தற்குச் சட்டத்தின் அனுமதி எதுவும் தேவையில்லை. முதல்நோக்கிலேயே புனை யப்பட்ட வழக்கு எனத் தெரிந்து விடுகிறது. ஜெயலலிதா - சசிகலா கும்பலின் இலஞ்ச-ஊழல்-அதிகார முறைகேடுகளைப் பல ஆண்டுகளாக அம்பலப்படுத்தி வந்திருக்கிறது, நக்கீரன். வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் கொலை வெறியன் தேவாரத்தின் தலைமையில் மலைவாழ் மக்களுக்கெதிராக நடக்கும் அட்டூழியங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது, நக்கீரன். ஜெயல லிதா மீண்டும் ஆட்சிக்கு வந்த நாள்முதல் நக்கீரன் பணியாளர்களையும் ஆசிரிய ரையும் வேட்டையாடத் தொடங்கிவிட்டன, ஜெயலலிதா அரசும் போலீசும்.

ஆனால், ''பொடா'' சிறப்பு நீதிமன்ற நடுவர் அதை நம்பி, தொடர்ந்து கோபாலின் காவலை நீடித்துக் கொண்டே போகிறார்; கோபாலின் பிணைக்கான மனுவை நிராகரித்துவிட்டார். போலீசின் கூற்றை அப்படியே ஏற்று இரண்டு சிறு வர்கள் மீதான ''பொடா'' குற்றச்சாட்டின் கீழ் சிறையில் அடைத்ததற்காக உயர்நீதி மன்றத்தின் கண்டனத்துக்குள்ளானவர் அந்நீதிபதி. கோபாலின் பிணைக்கான மனுவை ஏற்க மறுப்பதோடு, போலீசின் மீதான கோபாலின் புகார்களை ஏற்கவும் மறுத்து வருகிறார். இந்நிலையில் கோபாலின் பிணைக்கான கோரிக்கையை ஏற்ற தோடு, அதற்காக உயர்நீதி மன்றம் அளித்துள்ள விளக்கமும் கவனிக்கத்தக்கதாக உள்ளது. கோபாலை ''பொடா''வில் கைது செய்ததற்காகக் கூறப்படும் போலீசின் தகவல்கள் சுய முரண்பாடுடையன; கோபாலைக் கைது செய்தபோது கைப்பற்றப் பட்ட ஆயுதம் மஸ்கட்டுகளோடு கன், பிஸ்டல், ரைஃபிள் என்று மூன்றுவிதமாக போலீசார் தகவல் தந்துள்ளனர். தடைசெய்யப்பட்ட அமைப்பின் கையேடு என்றும் துண்டுப்பிரசுரம் என்றும் சுய முரண்பாடாகக் கூறியுள்ளனர். உண்மையில் இவை எதுவும் கைப்பற்றப்பட்டதாக நம்புவதற்கிடமில்லை என்று கூறி உயர்நீதி மன்றம் கோபால் பிணையில் போவதற்கு அனுமதி வழங்கியது.

அவரைப் பிணையில் விடக்கூடாது என்பதற்காகவே சதிசெய்து வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு இழுத்தடித்ததோடு, உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது ஜெயலலிதா அரசும் போலீசும். தமிழில் துப்பாக்கி என்ற ஒரு சொல்லை மொழி பெயர்க்கையில் நேர்ந்து விட்ட தவறுதான் இது; மேலும் வீரப்பனோடு சேர்ந்து குற்றங்கள் புரிந்துள்ளார்; வெளியே விட்டால் தலைமறைவாகிவிடுவார்; சாட்சியங்களைக் கலைத்துவிடுவார் என்ற அரசின் வாதங்களை ஏற்று கோபாலின் பிணையை உச்சநீதி மன்றம் இரத்து செய்து விட்டது.

தமிழையும், தமிழக அரசியல் நிலைமையையும் பரிசீலிக்காமல் தீர்ப்புச் சொல்வதற்கு எந்த நீதி மன்றத்துக்கும் அருகதை கிடையாது என்பது இதிலிருந்து தெரியவரும் இன்னொரு விடயமாக உள்ளது. முன்பு ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் அவரது கூட்டாளிகள் மீதும் இப்போது சசிகலா நடராஜ னுடன் தொடர்புடையவர்களாகக் கருதப்படும் செரீனா மற்றும் அவரது தாயின் மீதும் கஞ்சா வழக்குப் போடப்பட்டதைப் போல தமிழக அரசும் போலீசும் பொய் வழக்குகள் ஜோடிப்பது வழக்கமாகி உள்ளது; இதற்காக உயர்நீதி மன்றத்திலும் மனித உரிமை ஆணையத்திலும் தமிழக போலீசு பலமுறை கண்டனமும், தண்ட னையும் பெற்றுள்ளது. இப்போது கோபாலின் பிணையை இரத்து செய்ததன் மூலம் ''பொடா'' உட்பட பொய்வழக்குகள் போட்டு பழிவாங்குவதற்குத் தாராள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ●

www.padippakam.com

# பயங்கரவாத பீதியில் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள்

''இந்தியா, இசுரேல், இந்தோனேசியா என்று எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் முடிவில்லாமல் தொடரும் ஒரு பயங்கரவாத யுகத்தில் வாழ நாம் சபிக்கப் பட்டு விட்டது போலத் தெரிகிறது. பூமியின் எந்தப் பகுதியும் பாதுகாப்பானதாகத் தோன்ற வில்லை.''

மும்பை மாநகரில், கடந்த எட்டு மாதங் களில் நடந்த குண்டு வெடிப்புகள், குறிப்பாக ஆகஸ்டு 25 அன்று நடந்த இரட்டை குண்டு வெடிப்புகள் யாரால், எவ்வாறு திட்ட மிடப்பட்டு செய்து முடிக்கப்பட்டன என்பதை அறிந்த இந்திய ஆளும் வர்க்கத்தினர் எந்த அளவு கதிகலங்கிப் போயுள்ளனர் என்பதன் பிரதிபலிப்புதான் இந்த வாக்குமூலம்.

இந்த வாக்குமூலம் ''இந்தியா டுடே'' பத்தி ரிக்கைக் குழுமத்தின் தலைவரும் அதன் தலைமை ஆசிரியருமான அருண்பூரி எழுதி, அதன் ஆசிரியரும் ஆர்.எஸ்.எஸ். சீடருமான பிரபு சாவ்லா வழிமொழிந்து வெளியிடப் பட்ட ஆசிரிய உரை.

''செப்டம்பர் 11 அன்றைக்கு (அமெரிக் காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு) பின்னே இருந்த மனிதர்கள் படித்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். காசுமீரில் உள்ள மனிதர்கள் துப்பாக்கிகளைச் சுழற்றுபவர்கள்; தமிழ்ப் புலிகள் விநோத உடையணிந்த கொலைகாரர்கள்; பாலஸ்தீனத் தற்கொலை குண்டுதாரிகள் பதின் வயதினர். கடந்த மாதம் மும்பையில் நடந்த இரட்டைக் குண்டுவெடிப் புகளுக்குப் பிறகு, இந்தியா பயங்கரவாதத்தின் புதிய முகம் ஒன்றைப் பார்க்கிறது.''

''தீவிரவாத வரலாற்றில் முதல்முறையாக ஒரு குடும்பம் முழுவதும் அரசுக்கு எதிராகப் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. ஒரு கணவன், மனைவி, அவர்களின் பதின்வயது மகள் ஆகியோர் மீது வெடிபொருட்களைப் பதுக்கி வைத்தது, கூடிச் சதி செய்தது, அவற்றைக் கடத்திக் கொண்டு போனது, 52 பேரைக் கொல்லுமாறு அவற்றை வெடிக்கச் செய்தது என்கிற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள் ளன.''

''இதை அவர்கள் பணத்திற்காகவோ, தனிப்பட்ட விரோதத்திற்காகவோ செய்ய வில்லை. குஜராத் கலவரங்களுக்குப் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இதைச் செய்ததாக அவர்கள் வாக்குமூலம் தந்திருக்கி றார்கள். ஒரு சாமானியர் தனது குடும்பம் முழு வதையும் இத்தகைய பயங்கரவாதச் செயலில் ஈடுபடுத்தத் துணியும்போக்கு பயபீதியூட்டுவ

**''முடிவில்லாமல் தொடரும் ஒரு பயங்கரவாத யுகத்தில் வாழ நாம் சபிக்கப் பட்டு விட்டது போலத் தெரிகிறது. பூமியின் எந்தப் பகுதியும் பாதுகாப்பான தாகத் தோன்ற வில்லை.''**

**- இந்தியா டுடே**



குஜராத் கொடூரத்திற்கு


படிப்பகம்

www.padippakam.com

தாக உள்ளது.''

'' 'செல்' என்றழைக்கப்படும் ஒரு குழுவால் நடத்தப்படும் இந்தப் புதிய வகையிலான பயங்கரத்தை இந்தியா கையாள வேண்டியிருக்கிறது. 'செல்' என்பது, மிகமிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்தக்கூடிய மிக மிகச் சிறியதொரு குழுவாகும். சையது முகம்மது ஹனிஃப், அவருடைய மனைவி மற்றும் மகள் ஆகிய அந்தக் குடும்பத்தினர் இதற்கு முன்பு ஒரு கிரிமினல் குற்றச்செயலில் ஈடுபட்டவர்களோ, தடை விதிக்கப்பட்ட அமைப்புகளின் உறுப்பினர்களோ அல்ல. அவர்கள் அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய முகங்களைக் கொண்டவர்கள் அல்ல - அதாவது முகம் தெரிந்தவர்கள் அல்ல. ஆனால் ஒன்றல்ல, இரண்டு குண்டுகளை வெடிக்கச் செய்யும் அளவுக்கு உணர்வு ஏற்றப்பட்டவர்கள். மும்பையில் நெருக்கமாகவும் இறுக்கமாகவும் குவியலாக உள்ள ஒரு குடிசைப் பகுதியில் கூட இரகசியத்தைக் காத்து வந்திருக்கிறார்கள். ஹனிஃபின் மனைவி ஃபாமிதா குண்டு வைத்துவிட்டு, ஒரு சாதாரணமான அடுத்த வீட்டுக் குடும்பப் பெண்ணைப் போல காய்கறிகள் வாங்கிக் கொண்டு, வீடு திரும்பி சமைக்கிறாள். அவர்களின் இந்த மிக மிகச் சாதாரணமான காழ்ப்புணர்வு வியப்பூட்டுவதாக இருக்கிறது'' என்கிறது 'இந்தியா டுடே' பத்திரிக்கையின் தலைமை ஆசிரிய உரை.

இது, இந்திய மக்கள் மீது, குறிப்பாக மதச் சிறுபான்மையினர் மீது பார்ப்பன பாசிச பயங்கரவாதத்தைக் கேள்விமுறைக்கு இடமில்லாமல் கட்டவிழ்த்து விடுவதற்கான பிரச்சாரங்களில் ஒன்று என்பதாக மட்டும் கருத முடியாது. உண்மையில் மும்பை ஆக. 25 இரட்டைக் குண்டுவெடிப்புகள் இந்திய ஆளும் வர்க்கத்துக்கு, குறிப்பாக ஆளும் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளதைத்தான் வெளிப்படுத்துகிறது.

இந்தியாவின் பொருளாதார தொழில் தலைநகரமாகக் கருதப்படும் மும்பை நகரை மட்டுமல்ல, நாட்டையே குலுக்கி விட்டது. அந்நாளை அவர்கள் கறுப்புத் திங்கள் என்று அழைக்கிறார்கள். இப்படியே போனால் வாரத்தின் ஏழு நாட்களும் கறுப்பு தினங்களாகவே இருக்கும் என்று அஞ்சுகிறார்கள். என்னதான் வீரதீரச் சவடால்கள் அடித்தாலும் அவர்களின் முகங்களில் பயபீதியும் குலைநடுக்கமும் நிழலாடுகின்றன.

சையது முகம்மது ஹனீஃப், கர்நாடகாவின் மங்களூரில் பிறந்து, பத்தாம் வகுப்புத் தேறி, வேலைதேடி மும்பையில் குடியேறியவர். சவூதியிலும், துபாயிலும் மின்சார ஊழியராக வேலை பார்த்தவர். மும்பை திரும்பி ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறார். எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத, ஒழுக்கமானவர். தீவிர இறை நம்பிக்கை கொண்ட, மத ஆச்சாரங்களைப் பற்றி ஒழுகுபவர். குஜராத் சூரத்



மும்பையில் பதிலடி

''தீவிரவாத வரலாற்றில் முதல்முறையாக ஒரு குடும்பம் முழுவதும் அரசுக்கு எதிராகப் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கிறது.''


படிப்பகம்

www.padippakam.com

நகரைச்சேர்ந்த அஷ்ரத் அன்சாரி என்ற சரிகை வேலை செய்பவர் மூலமாக குஜராத் கலவரத்தின் போது இசுலாமியர்கள் குறி வைத்துத் தாக்கப்பட்ட கொடூரமான சம்பவங்களை அறிந்து கொண்டார். பின்னர், குஜராத் பழி வாங்கும் குழுவினரின் ஆடியோ, வீடியோ பிரச்சாரங்கள் மூலம் குஜராத்தில் கர்ப்பிணிப் பெண்களும் இளம் பெண்களும் பாலியல் வன்முறைக்குப் பலியானது, இசுலாமியர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டது ஆகியவற்றைக் கண்டு இடிந்து போய் பழிவாங்கத் துடித்தார். ''என்னுடைய குழந்தைகளை காஃபிர்கள் குறி வைத்துத் தாக்குவது மாதிரி எனக்கு அடிக்கடி கனவு வரும்'' என்று வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

ஹனீஃப், குஜராத் கலவரக் கொடூரங்களைத் தனது மனைவி ஃபாமிதாவுடனும் மகள் ஃபர்ஹீனுடனும் பகிர்ந்து கொண்டார். ஃபாமிதா அரை குறையாகப் படித்த ஒரு குடும்பத் தலைவி. அவர்களின் மூத்த மகள் ஃபர்ஹீன் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்ட இளம்பெண். போலீசின் பார்வையில் ''ஒரு பயங்கரவாத செல்''லாகக் கருதப்படும் இந்தக் குடும்பம் திடீரென்று அப்படி மாறிவிடவில்லை. குஜராத் கலவரக் கதைகள் மட்டுமே அதற்குக் காரணமும் இல்லை. 1992 பாபரி மசூதி இடிப்புக்கு முன்னும் பின்னும் மும்பையில் இந்து மதவெறியர்கள் அடுத்தடுத்து நடத்திய பயங்கரவாதப் படுகொலைகளைக் கண்டு வந்திருக்கிறார்கள்.

செய்தி ஊடகங்கள், திரைப்படங்கள், வதந்திகள் மற்றும் இந்து மதவெறி பாசிச மேடைகளில், பயங்கரவாதிகள் எப்படி இருப்பார்கள், வாழ்வார்கள் என்று இதுவரை சித்தரிக்கப்பட்டார்களோ, அப்படி ஹனீஃப் தலைமையிலான ''செல்'' இல்லை.

பயங்கரவாதிகள் என்றால் எல்லைக் கப்பால் பயிற்சி பெற்றவர்கள்; ஏ.கே 47 துப்பாக்கிகளோ, ஆர்.டி. எக்ஸ் குண்டுகளோ வைத்திருப்பார்கள்; போதைப் பொருள் கடத்துவார்கள், பணம் புரளும், பகலெல்லாம் தூங்கி வழிவார்கள்; இரவில் 'தண்ணி' அடித்துக் கொண்டு சீட்டோ, சதுரங்கமோ ஆடிக் கொண்டு புகைபிடித்தபடி சதித்திட்டங்கள் தீட்டுவார்கள்; காடுகளிலோ, பாழடைந்த இருட்டறைகளிலோ பதுங்கியிருப்பார்கள். தனிப்பட்ட அநீதிக்கு எதிராகப் பழி வாங்கும் வெறியர்களாயிருப்பார்கள். படித்த வேலையற்ற இளைஞர்களாக இருப்பார்கள்.

- இப்படிப்பட்ட செய்தி ஊடக, சினிமா சித்திரங்களை எல்லாம் கிழித்தெறிந்து விட்டன. ஆக. 25 மும்பை இரட்டைக் குண்டு வெடிப்புகள்; பயங்கரவாதிகளைப் பற்றிய அவர்களின் பழைய கற்பிதங்கள் எல்லாம் தகர்ந்து போனது பற்றி ''இந்தியா டுடே'' இப்படி எழுதுகிறது:

''பயங்கரவாதிகள் இப்படி இருக்கமாட்டார்கள், ஒரு சாதாரண குடும்பம் பிக்னிக் போவதுபோல போய், பயங்கரத்தை விதைத்துவிட்டு வரமாட்டார்கள். பயங்கரவாதிகளுக்கு என்று ஒரு வீடு இருக்காது; வேலை இருக்காது; அக்கம்பக்கத்தவர்கள் இருக்கமாட்டார்கள். தாங்கள் நம்பும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் இயங்குவார்கள். பயங்கரவாதிகள் துப்பாக்கிகளை மடியில் பதுக்கி வைத்திருப்பார்களேதவிர, குழந்தைகளை வைத்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு குடும்பம் இருக்காது. அப்படி இருந்தாலும் குண்டு வைக்கும்போது குடும்பத்தையும் கூட அழைத்துப் போக மாட்டார்கள். இந்தப் பழைய விதிகளை எல்லாம் மும்பையின் அந்தக் கறுப்பு திங்கள் கிழமை தூக்கியெறிந்து விட்டது.''

மும்பை இரட்டைக் குண்டு வெடிப்புகள் பற்றிய செய்தி கிடைத்ததும் இந்திய அரசியல் தலைவர்களும் தெரிவித்த கருத்துகள் எல்லாம் வேடிக்கையாகவும், கேலிக்குரியதாகவும், முட்டாள்தனமானதாகவும், உள்நோக்கம் கொண்டதாகவும் தெரிகிறது. நாட்டின் போலீசு மந்திரி அத்வானி உட்பட இந்து பாசிஸ்டுகள் அனைவரும் பாகிஸ்தானின் லஸ்கர் - இ - தொய்பா, ஜெய்ஸ் - இ - முகம்மது ஆகியவற்றோடு கூட்டுச் சேர்ந்து தடை செய்யப்பட்ட ''சிமி'' (இந்திய இசுலாமிய மாணவர் இயக்கம்) தான் இந்தச் செயலில் ஈடுபட்டது என்று உடனடியாகவே கூறினர். பிரதான எதிர்க்கட்சி காங்கிரசின் தலைவி சோனியாவோ தேச விரோத சக்திகளின் செயல் என்று பொதுவாகக் கூறினார். அதேசமயம் போலி மார்க்சிஸ்ட் கட்சியோ, ''இது பயங்கரவாதிகளின் செயல்; பாகிஸ்தானின் உளவு அமைப்பாகிய ஐ.எஸ்.ஐ. நாட்டில் ஊக்கமாகச் செயல்படுகிறது'' என்று ''புலனாய்வு'' செய்து கூறியது.

மத்திய, மாநில உளவுப் படையினரும், மும்பை போலீசும் தங்களிடம் உள்ள சந்தேகத்துக்குரிய இசுலாமிய அமைப்புகள் அத்தனையின் பெயர்களையும் குண்டு வெடிப்புகளுக்குக் காரணமானவர்கள் என்று முதலில் கதைவிட்டன. ''தியோபந்தி இஸ்லாமிய இயக்கத்தின் துணை அமைப்புகள் தப்லீக் ஜமாத் மற்றும் அஹ்லே ஹதீஸ் ஆகியவை மூலமாக முசுலீம் இளைஞர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்களை வைத்து சிமி, ஜெய்ஷ்-இ-முகமது, லஷ்கர்-இ-தொய்பா, ஹர்கத்- உல்-ஜிகாத், ஹர்கத்-உல்-முஜாகிதின் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள முசுலீம் பாதுகாப்புப் படை, குஜராத் பழிவாங்கும் குழு ஆகிய இசுலாமிய அடிப்படைவாத அமைப்புகள் பயங்கரவாதச்செயலில் ஈடுபடுகின்றன. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. என்ற உளவு அமைப்புதான் இவற்றுக்குப் பயிற்சி, பணம், வெடிபொருட்களோடு, சதித்திட்டங்களும் தீட்டிக் கொடுத்து ஏவி விடுகின்றது. இப்படிப்பட்ட அமைப்புகளில் ஒன்றோ, சில அமைப்

**''என்னுடைய குழந்தைகளை காஃபிர்கள் குறி வைத்துத் தாக்குவது மாதிரி எனக்கு அடிக்கடி கனவு வரும்.''**

***- ஹனீஃப்***



படிப்பகம்

www.padippakam.com

புகள் கூட்டுச் சேர்ந்தோ மும்பை குண்டு வெடிப்புகளை நடத்தியிருக்க வேண்டும்'' என்றன, இந்திய உளவுப் படைகளும் போலீசும்.

இதைவிட ஒருபடி மேலேபோய் ஆர்.எஸ்.எஸ். ஆட்சியாளர்களின் கட்டுக்கதைகளை அப்படியே அவிழ்த்து விடுபவர்களும் உண்டு. ''சிமி இப்போது முழுமையான பயங்கரவாத அமைப்பாகவும், லஷ்கர் உலகளாவிய பயங்கரவாத அமைப்பாகவும் வளர்ந்துவிட்டன. இந்தியாவை விடுவித்து ஒரு இசுலாமிய நாடாக ஆக்குவதே சிமியின் நோக்கம். இசுரேலையும் அமெரிக்காவையும் தாக்குவதே லஷ்கர்-இ-தொய்பாவின் குறியாக இருக்கிறது.



ஆகஸ்டு 25 மும்பை குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சையது முகம்மது ஹனீஃப் (வலது பக்கம் முகம் மூடப்பட்டு இருப்பவர்) மற்றும் அவரது மகள் ஃபர்ஹீன் (இடது பக்கம் பர்தா அணிந்திருப்பவர்).

''சிமி, லஷ்கர் போன்ற அமைப்புகள் நாட்டின் சட்டம் ஒழுங்கைப் படிப்படியாகக் குலைத்து, ஒரு கட்டத்தில் அதிகார வெற்றிடம் உருவாகும்போது, அதை இசுலாமிய சக்திகள் நிரப்பிவிடும் நோக்கில் வேலை செய்கின்றன. அப்படிப்பட்ட சதிவேலைகளில் ஒன்றுதான் மும்பை குண்டுவெடிப்புகள்'' என்ற கற்பனைக் கட்டுகதைகளை இந்து பாசிச விசுவாசிகள் உடனடியாகவே பரப்பினர்.

இந்திய இராணுவம், துணை இராணுவத்துக்கு எதிராக, இவற்றின் முகாம்களுக்குள்ளாகவே காசுமீரில் தொடரும் தற்கொலைப் படைத் தாக்குதல்கள்; நாடாளுமன்றம், குஜராத் அக்சர்தாம் கோவில் வளாகத் தாக்குதல்களை எடுத்துக்காட்டுகளாக வைத்து மும்பைக் குண்டு வெடிப்புகள் குறித்த ஊகங்களை வெளியிட்டனர். ஆனால், மும்பை இரட்டைக் குண்டு வெடிப்புகளுக்குக் காரணமானவர்கள் என்று ஹனீஃப் குடும்பத்தினரைக் கைது செய்தபோது இந்திய உளவுப்படையினரும், மும்பை போலீசும், இவர்களுடைய அரசியல் தலைவர்களும் அதிர்ச்சியடைந்தனர்.

ஏற்கனவே புலனாய்வு செய்து, பதிவு செய்யப்பட்ட பயங்கரவாதிகளின், அமைப்புகளின் வரையறைக்குள் வராத ஹனீஃபின் குடும்பத்தைப் போன்ற முகமற்ற, ஏற்கெனவே எந்த வகையிலும் சந்தேகப்பட முடியாத குடும்பங்கள் எத்தனை எத்தனை, எங்கெங்கு இருக்கின்றன என்று தெரியாது. அவர்கள் தமது பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு சாத்தியமான இடங்களை ஊகம் செய்து தகுந்த பாதுகாப்புக் கொடுக்கவோ, தடுக்கவோ முடியாத நிலை.

''ஆனால், தேசத்தின் தெரிந்த எதிரிகளை விடப் பன்மடங்கு பயங்கரமானவர்கள் இவர்கள். இதுதான் பயங்கரவாதத்தின் புதிய முகம் என்றால், அரசு தன் சொந்த மக்களுடனேயே யுத்தத்தில் இறங்க வேண்டும் போலிருக்கிறது'' என்கிறது இந்தியா டுடே பத்திரிக்கை. அதாவது இசுலாமிய சமுதாயம் முழுமைக்கு எதிரான யுத்தம் நடத்த வேண்டி வரும் என்கிறது.

''தனது சொந்த மக்களுக்கு'' எதிராக குஜராத் இந்து பாசிச அரசு ஏற்கெனவே யுத்தம் நடத்தி வருகிறது. முசுலீம்களின் சொத்துக்களைச் சூறையாடி, தீயிட்டுக் கொளுத்தி, பயங்கர ஆயுதங்களால் தாக்கி, உயிரோடு எரித்து, பாலியல் வன்முறை வெறியாட்டம் போட்டு, கருவில் உள்ள குழந்தைகளையும் கொன்று குவித்து, கல்லறைகளைத் தோண்டிப் பிணங்களையும் வெட்டிப் போட்டு, இனியும் இந்த மண்ணில் மானத்தோடும் உயிரோடும் வாழ முடியாது என்கிற பயபீதியூட்டினர். குஜராத்தில் நடந்த இந்தக் கொடூரங்கள் நாளை நாடு முழுவதும் நடத்துவதற்கான பரிசோதனைதான் என்று பகிரங்கமாகவே மிரட்டுகின்றனர்.

காற்றை விதைத்தால் புயலைத்தான் அறுவடை செய்ய முடியும். இந்து பாசிச பயங்கரவாத வெறியாட்டம் அவர்கள் விரும்பியவாறு, எதிர்பார்த்தவாறு இசுலாமிய சமுதாய முழுவதும் பயபீதியில் மூழ்கி ஒடுங்கிப் போகச் செய்யவில்லை. ஹனீஃபுகளையும், ஃபாமிதாக்களையும், ஃபர்ஹீன்களையும் உருவாக்கியிருக்கிறது. ஹனீஃபுடன் குண்டு வைக்கப் போனதாகக் கூறப்படும் அவரது மனைவி ஃபமிதா தன் செயலுக்காக வருந்தவில்லை. குண்டு வெடிப்புகளால் அப்பாவிகள் கொல்லப்பட்டதைப் பற்றிக் கேட்டபோது, ''குஜராத்தில் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி கர்ப்பிணிப் பெண்களுடன் ஒப்பிட்டால் இது ஒன்றுமில்லை'' என்று கூறியிருக்கிறார் ஃபாமிதா. குஜராத்தில் நடந்த வகுப்புவாதக் கலவரங்கள் குறித்து தனது கணவன் கொண்டிருக்கும் அதே கோபத்தை, வெறுப்பை மனைவியும் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர்களின் மகள் ஃபர்ஹினோ,

**''குஜராத்தில் கற்பழிக்கப் பட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி கர்ப்பிணிப் பெண்களுடன் ஒப்பிட்டால் இது ஒன்றுமில்லை.''**

*- ஃபாமிதா*

www.padippakam.com

''சாவைக் கண்டு யாருக்கு பயம்?'' என்று உறுதியாகக் கூறியிருக்கிறாள்.

இந்து பயங்கரவாதத் தாக்குதல்கள் முசுலீம்களிடையே பயபீதியை உருவாக்கும் என்பது உண்மைதான். ஆனால், கணிசமான முசுலீம்களிடையே எதிர்த்தாக்குதல் உணர்வையும் ஏற்படுத்தும். இந்த நிலையில் ஹனீஃப் குடும்பம் போன்றவை தோன்றத்தான் செய்யும். சிறுபான்மையினரான இசுலாமியர்கள், ஆர்.எஸ்.எஸ். முதலிய பாசிச - மதவெறி சக்திகளுக்கு எதிராகத் தமது சொந்த பலத்தில் மக்கள் பெருந்திரள் எதிர்த்தாக்குதல்களை தாமே தொடுக்க முடியாது. நாட்டின் மதச்சார்பற்ற, ஜனநாயக புரட்சிகர சக்திகள் இந்துமதவெறி பாசிசத்துக்கெதிரான ஊக்கமான, போர்க்குணமிக்க மக்கள் பெருந்திரள் எதிர்த்தாக்குதல் தொடுக்குமளவு அணிதிரளாதபோது, இசுலாமிய எதிர்-பயங்கரவாதத்திடம் அவர்கள் தஞ்சமடைகிறார்கள்.

இந்து பாசிச பயங்கரவாதத் தாக்குதல்களின் எதிர் விளைவாகத்தான் இசுலாமிய எதிர்-பயங்கரவாதத் தாக்குதல்கள் உள்ளன. அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்கு முன்னும் பின்னும் நாடு முழுவதும் இந்துவெறி பாசிஸ்டுகள் நடத்திய கொடூரமான பயங்கரவாத வெறியாட்டத்துக்கு பதிலடியாகவே முந்தைய மும்பை, கோவை முதலிய குண்டு வெடிப்புகள் நடந்தன. குஜராத் பாசிச காட்டுமிராண்டி நரேந்திர மோடியின் படுகொலைகள் - கற்பழிப்புகளுக்குப் பதிலடியாகத்தான் அக்சர்தாம் கோவில் வளாகத் தாக்குதல், மும்பை குண்டு வெடிப்புகள் நடந்தன.

இந்த உண்மையை மூடி மறைத்து ''எல்லைக்கப்பால் இருந்து ஏவிவிடப்படும் ஜிஹாதி பயங்கரவாதிகளால் நாட்டுக்கும் மக்களுக்கும் பேராபத்து சூழ்ந்திருக்கிறது; ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. சங்கப் பரிவாரத்தால்தான் இவர்களைக் காப்பாற்ற முடியும்'' என்று சொல்லியே அரசியல் ஆதாயம் தேடுவதைத் தமது கொள்கையாகக் கொண்டிருக்கின்றன, இந்து பாசிச சக்திகள். இதன் விளைவாக நாட்டையே பயங்கரவாதம், எதிர்-பயங்கரவாதம் என்கிற நச்சுச் சுழற்சியில் தள்ளிவிட்டார்கள். அத்வானி, நரேந்திர மோடி, பிரவீண் தொக்காடியா போன்ற இந்து பாசிச வெறியர்கள் நாளுக்குநாள் சூடேற்றிக் கொண்டே போகிறார்கள்.

இந்து பயங்கரவாதம், அதற்கு எதிரான முசுலீம் எதிர்-பயங்கரவாதம் என்கிற விஷச்சுழற்சியில் இருந்து நாடும் மக்களும் மீள்வதற்குள்ள எல்லா வழிகளையும் இந்து பாசிச அரசியல்வாதிகள் மூடிக் கொண்டே வருகிறார்கள். ஜிகாதி பயங்கரவாதத்திட மிருந்து - எல்லைக்கப்பாலிருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதத்திடமிருந்து - நாட்டைக் காப்பது என்கிற பெயரில் நாட்டை பாசிசப் படுகுழியில் தள்ளுவதுதான் அவர்களின் கொள்கையாகவும் குறிக்கோளாகவும் இருக்கிறது.

**''இந்து பயங்கரவாதத் தாக்குதல்கள் முசுலீம் களிடையே பயபீதியை உருவாக்கும் என்பது உண்மைதான். ஆனால், கணிசமான முசுலீம் களிடையே எதிர்த்தாக்குதல் உணர்வையும் ஏற்படுத்தும்.''**

பொது சிவில் சட்டம், மதமாற்றத்தடைச் சட்டம், பசுவதைச் சட்டம் - இவையெல்லாம் இந்து பாசிசத்தை நிறுவுவதற்கான படிகற்கள்தாம். பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்கிற பெயரில், மேலும் ''பொடா'' போன்ற சட்டங்களைக் கடுமையாக்கி இராணுவம், துணை இராணுவம் உளவுப்படை, அதிரடிப் படை போன்றவற்றின் தேடுதல் வேட்டைகளை நடத்துவது; அரசுப் படைகளுடன் மோதல் என்கிற பெயரில் படுகொலைகள் செய்வது; இதற்கெல்லாம் பயங்கரவாதப் பீதியூட்டி பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறுவது; நாட்டிலிருந்து அந்நியர்களை வெளியேற்றுவது, பயங்கரவாதிகளின் கூட்டாளிகள் - ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்துவது, பெருமளவிலான மதவெறியாட்டங்களை - கலவரங்களை நடத்துவது ஆகியவை மூலம் கணிசமான அளவு முசுலீம்களை சிறையிலோ, அகதி முகாம்களிலோ அடைப்பது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் பொது அடையாள அட்டை முறை, கணினிமயமான ஆவணப்பதிவுகள் மூலமும் தெருவுக்குத் தெரு போலீசு சாவடிகள் நிறுவுவதன் மூலம், நாடு முழுவதையும் கண்காணிப்பு முகாமாக மாற்றுவது; நவீன ஆயுத பாணியான அதிரடி கமாண்டோ படையைப் பெருமளவில் கட்டி, எந்நேரமும் தாக்குதல் தொடுக்கும் தயார்நிலையில் வைப்பது; இவற்றுக்கெல்லாம் இசுரேலின் அனுபவம் - பயிற்சியைப் பெறுவது; பயங்கரவாதத்தைக் காரணங்காட்டி ஆப்கான், ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்து ஆக்கிரமித்ததைப் போல பாகிஸ்தான் மீது படையெடுத்து ஆக்கிரமிப்பது, அதற்கு அமெரிக்காவின் உதவியை என்ன விலை கொடுத்தும் பெறுவது - இவைதான் இந்து பாசிஸ்டுகளின் வழிமுறைக் கொள்கையாக உள்ளது.

அதாவது, அரசு பயங்கரவாதத்தையும் இந்து பாசிச பயங்கரவாதத்தையும் மேலும் உறுதியாகவும் திட்டமிட்ட நுட்ப ரீதியாகவும் ஒருங்கிணைப்பதன் மூலம் தமது குறிக்கோளை ஈடேற்றி விட முடியும் என்று ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பன பயங்கரவாதிகள் நம்புகின்றனர். ஆர்.எஸ்.எஸ். -இன் அதிகார பூர்வ அரசியல் சித்தாந்த ஊடகங்கள் பகிரங்கமாகவே இப்படிக் கூறுகின்றன. ஆனால், நடப்புகள் அவர்களுக்கு சாதகமான பாதையில் முன்னேறவில்லை. குஜராத்தில் கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தை சாக்கு வைத்து ஒரு பேரழிவு கலவரத்தை நடத்த முடிந்ததைப் போல மும்பை குண்டுவெடிப்புகளை சாக்கு வைத்து முசுலீம் சமுதாயத்துக்கு எதிரான மற்றொரு பேரழிவுக் கலவரத்தை ஆர்.எஸ்.எஸ். - சிவசேனா பாசிஸ்டுகளால் கட்டவிழ்த்து விட முடியவில்லை. இந்து பாசிச பயங்கரவாதத் தாக்குதல் அதற்கு எதிரான முசுலீம் எதிர்-பயங்கரவாதத் தாக்குதல் என்கிற விஷச் சுழற்சியில் இருந்து விடுபடவே உண்மையில் மக்கள் விரும்புகின்றனர் என்பதுதான் இதற்குக் காரணம்.

● ஆர்.கே.


படிப்பகம்

# இறால் பண்ணைகள் அழிப்பு

# கிள்ளை கிராம மக்களின் எழுச்சி

கடலூர் மாவட்டத்திலுள்ள கிள்ளை கிராம மக்கள் போர்க் கோலம் பூண்டு இரவோடிரவாக 44 இறால் குட்டைகளை அழித்தனர். தடுக்க வந்த போலீசு அதிகாரிகளைச் சிறைபிடித்தனர். இந்த மக்கள் எழுச்சி இறால் பண்ணை முதலாளிகள், போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தினரிடையே மாபெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

இப்போராட்டத்தை வன்முறை என்றும், இப்போராளிகளை வன்முறையாளர்கள் என்றும் போலீசும், ஆளும் வர்க்கமும் சித்தரிக்கிறது. உண்மையில், இறால் பண்ணை முதலாளிகளால் வன்மத்தோடு சூறையாடப்பட்டுள்ள இம்மக்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் எவரும் மேற்கண்ட சித்தரிப்பின் அயோக்கியத்தனத்தை அடையாளம் காண முடியும்.

கிழக்குக் கடற்கரையின் கழிமுகப் பகுதிகளில் சிதம்பரம் அருகேயுள்ள பிச்சாவரம் வனப்பகுதி சதுப்பு நிலக் காடுகளால் ஆனது. இயற்கையாகவே உள்ள இச்சூழலின் சாதகத் தன்மையால் இறால் மீன்கள் உட்பட எல்லா வகை மீன்களும் செழித்து வளர்கின்றன. இதை உணர்ந்த வாண்டையார் முதலான சிலர் இறால் பண்ணைகளை அமைக்கத் தொடங்கினர். கழிமுகப் பகுதிகளில் தொடங்கி நாளடைவில் விவசாயிகளை ஏமாற்றியும், மிரட்டியும் பெருமளவு நிலப்பகுதியை ஆக்கிரமித்து இறால் குட்டைகளை அமைத்திருந்தனர். விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பறிக்கவும், மீனவர்களிடமிருந்து தாய் இறால்களைப் பறிக்கவும் வாண்டையார் கும்பலுக்குத் தனி ரவுடிப்படையே உண்டு.

கடந்த பத்தாண்டுகளாய் இறால் குட்டைகள் இயங்கி வந்தாலும், அதன் விளைவுகளைக் காலம் கடந்தே விவசாயிகளும் மீனவர்களும் உணரத் தொடங்கினர்.

கிள்ளையைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏறக்குறைய 1000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டு வந்த நிலக்கடலை விவசாயம் கடுமையான பாதிப்படைந்தது. தென்னை, பனை மரங்கள் பட்டு போயின. இளநீர் போல் இனிக்கும் குடிநீர் மெல்ல உவர்ப்பாகி முழுவதும் உப்பு நீராக மாறியது. குடம் தண்ணீர் இரண்டு ரூபாய்; நல்ல குடிநீருக்கு 15 கி.மீ தூரம் நடக்க வேண்டும்; மொத்தத்தில், விவசாயமும் அழிந்து, விவசாயிகள் பிழைப்புக்காக கட்டிட வேலை தேடி கிராமங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இன்னொருபுறம், இறால் குட்டையிலிருந்து வெளியேறும் இரசாயன கழிவு நீர் கடல்பாசி, நத்தை, மீன் குஞ்சுகளையும், மற்றவகை மீன்களையும் வளர விடாமல் சாகடித்து விடுகின்றன. இதனால் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மீனவர்களும் வாழ இயலாத நெருக்கடிக்குத் தள்ளப்பட்டனர்.

இப்பாதிப்புகளைக் கடந்த சில ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் பல முறை அதிகார வர்க்கத்தின் செவிட்டுக் காதில் அறைந்து கொண்டு வந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக, சி. மனப்பாடி, நஞ்சமகத்து வாழ்க்கை, பிச்சாவரம், முடசல் ஓடை, நடுமுடசல் ஓடை, வடக்கு முடசல் ஓடை, எம்.ஜி.ஆர். திட்டு, முழுக்குத் துறை, சின்ன வாய்க்கால், த.சோ. பேட்டை, பில்லுமேடு, மடுவங்கரை, கிள்ளை உள்ளிட்ட கிராம மீனவர்கள் ஒன்று சேர்ந்து ''சிங்காரவேலர் மீனவர் வளர்ச்சி சங்கம்'' என்ற அமைப்பில் அணிதிரண்டனர்.

இச்சங்கம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் கிள்ளையில் விழிப்புணர்வு மாநாட்டை நடத்தியது. இறால் பண்ணைகளால் விளையும் பாதிப்புகளை விளக்கியும், அதற்கெதிராக போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இம்மாநாட்டில் அப்பகுதி மக்கள் 2500 முதல் 3000 பேர் வரை கலந்து கொண்டனர்.

மாநாட்டைத் தொடர்ந்து இறால் பண்ணைகளை முழுவதுமாக அகற்றக் கோரி கடந்த ஆகஸ்டு மாதம் சிதம்பரம் நகரில் உண்ணாவிரத போராட்டத்தையும் நடத்தியது.

மீனவர்களின் தொடர் போராட்டத்தின் விளைவாக மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் புறம்போக்கு நிலத்திலிருந்த 33 இறால் குட்டைகள் அகற்றப்பட்டன. ஆனால் பட்டா நிலத்திலிருந்து இறால் குட்டைகளை அரசு கண்டுகொள்ளவில்லை. மீனவர் சங்கத்தின் போராட்டங்களுக்குப் போட்டியாக, இறால் பண்ணை முதலாளிகள் சங்கம் தனது கையாட்களைக் கொண்டு, ரவிச்சந்திரன் என்ற தி.மு.க. பிரமுகரின் துணையோடு ''இறால் பண்ணை ஆதரவு மாநாட்டை'' நடத்தியது.

ஓட்டுக் கட்சிகளின் துரோகம், அதிகார வர்க்கத்தின் அலட்சியம், இறால் பண்ணை முதலாளிகளின் ரவுடித்தனம் இவற்றால் தொடர்ச்சியாக வஞ்சிக்கப்பட்ட விவசாயிகளும், மீனவர்களும் இறால் பண்ணைகளைச் சட்ட வழியிலான போராட்டங்களால் மட்டுமே அகற்றிவிட முடியாதென்பதை உணர்ந்து போராட்ட வடிவத்தை மாற்றினர்.

செப்டம்பர் 18-ஆம் தேதி இரவு திட்டமிட்டப்படி ஆண்களும், பெண்களுமாக 600-க்கும் மேற்பட்ட விவசாயிகளும், மீனவர்களும் கழி, கம்பு,

தொடர்ச்சி 24-ஆம் பக்கம்

**இறால் குட்டைகளை அழித்தவர்களைக் கைது செய்ய வந்த போலீசாரை வழிமறித்து சிறைபிடித்த வீராங்கனைகள் - போலீசு காவலில்.**



www.padippakam.com

## உ.பி.யில் முலாயம் ஆட்சி

# போலி மதச்சார்பின்மை வேடமும் கலைந்தது

உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.க. - பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி பிளவுபட்டதையடுத்து, முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதிக் கட்சி தலைமையில் புதிய கூட்டணி ஆட்சி அம்மாநிலத்தில் அமைந்துள்ளது. முந்தாநாள்வரை பா.ஜ.க வின் முக்கியத் தலைவராக இருந்த கல்யாண் சிங்கும் நேற்று வரை தேசிய ஜனநாயகக் கூட்டணியோடு ஒட்டிக் கொண்டிருந்த அஜீத் சிங்கும், இன்று, இந்த மதச் சார்பின்மை ஆட்சியின் தளபதிகளாக வலம் வருகிறார்கள். நேற்று வரை மாயாவதியின் காலில் விழுந்து கிடந்த, பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த 37 மேல்சாதி சட்டமன்ற உறுப்பினர்கள், இன்று சமாஜ்வாதிக் கட்சியில் ஐக்கியமாகி, முலாயமை நம்பிக்கை வாக்கெடுப்பிலும் வெற்றி பெறச் செய்துவிட்டனர். இப்படிப்பட்ட கட்சி மாறிகளைக் கொண்ட, சந்தர்ப்பவாத கூட்டணி ஆட்சி அமைவது உ.பி. அரசியலில் புதிய விசயமல்ல.

2001-ஆம் ஆண்டு நடந்த உ.பி. சட்டமன்றத் தேர்தலில், எந்தவொரு கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்கும் பெரும்பான்மை கிட்டவில்லை. 403 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ள உ.பி.யில், முலாயமின் சமாஜ்வாதி கட்சிக்கு 141 இடங்களும் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சிக்கு 98 இடங்களும், பா.ஜ.க.விற்கு 86 இடங்களும் கிடைத்தன. அயோத்தி அமைந்துள்ள உ.பி. மாநிலத்தில், ராமர் கோயில் கட்சியான பா.ஜ.க., அத்தேர்தலில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது.

மாநில ஆளுநரும், தீவிர ஆர்.எஸ்.எஸ்.காரருமான விஷ்ணுகாந்த் சாஸ்திரியைப் பயன்படுத்தி, தேர்தல் முடிந்தவுடன் முலாயம்சிங் ஆட்சி அமைக்க முயன்றதை பா.ஜ.க. தடுத்தது; அதே சமயம், பகுஜன் சமாஜ் கட்சியோடு கூட்டணி சேர்ந்து ஆட்சி அமைப்பதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கவும் திட்டம் போட்டது.

முதல்வர் நாற்காலியை மாயாவதிக்கு விட்டுக் கொடுப்பதன் மூலம், உ.பி. மாநில அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வது என்பது ஒன்று. நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது உ.பி.யில் கணிசமான இடங்களில் போட்டியிட்டு வெல்ல, பகுஜன் சமாஜ் கட்சியின் 'தலித்' ஓட்டு வங்கியைப் பயன்படுத்துவது மற்றொன்று. எனினும் பா.ஜ.க.வைச் சேர்ந்த மேல்சாதி - குறிப்பாக தாகூர் சாதி சட்டமன்ற உறுப்பினர்களால் இப்பார்ப்பன – தலித் கூட்டணியைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதற்கு, மேல் சாதிவெறி மட்டும் காரணம் இல்லை. அவர்களால் அதிகாரத்தை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை என்பதும் இன்னொரு காரணம். இதனால், பா.ஜ.க.வைச் சேர்ந்த உ.பி.யின் முன்னாள் முதல்வர் ராஜ்நாத் சிங், பா.ஜ.க.வின் உ.பி. மாநிலத் தலைவர் வினய் கத்தியார் ஆசியோடு, தாகூர் சாதி எம்.எல்.ஏ.க்கள், மாயாவதியின் ஆட்சிக்கு எதிராக அடிக்கடி 'கலகத்'தில் இறங்கினர். குறிப்பாக இந்த ஆண்டின் தொடக்கத்தில், தாகூர் சாதியைச் சேர்ந்த கொடிய நிலப்பிரபுவும், சுயேச்சை எம்.எல்.ஏ.வுமான ராஜா பையாவின் தலைமையில், பா.ஜ.க.வைச் சேர்ந்த மேல்சாதி எம்.எல்.ஏ.க்கள் ஒன்று கூடி, மாயாவதி ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்தனர். இந்தச் சதியை மாயாவதியும், வாஜ்பாய் - அத்வானி கோஷ்டியும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு முறியடித்தனர். மாயாவதி, தனக்கு எதிராகக் 'கலகம்' செய்ய நினைக்கும் மேல்சாதி சட்டமன்ற உறுப்பினர்களைப் பீதியூட்டுவதற்காக தாகூர் சாதியைச் சேர்ந்த ராஜா பையாவை ''பொடா''வில் உள்ளே தள்ளினார்.

நித்திய கண்டம் பூரண ஆயுசு எனச் சென்று கொண்டிருந்த மாயாவதி ஆட்சிக்கு, மைய அரசில் விவசாய அமைச்சராக இருந்த அஜீத் சிங் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இருந்து விலகியது, பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அஜீத் சிங்கின் ராஷ்ட்ரிய லோக்தள் கட்சியைச்

சாதிவெறி-பதவிவெறிக் கூட்டணி



www.padippakam.com

சேர்ந்த 13 எம்.எல்.ஏ.க்கள், மாயாவதி அரசுக்குக் கொடுத்துவந்த ஆதரவை விலக்கிக் கொண்டதையடுத்து, மாயாவதி ஆட்சி எந்நேரமும் கவிழ்க்கப்படலாம் அல்லது கவிழ்ந்து விடலாம் என்ற அபாயத்தில் சிக்கிக் கொண்டது.

இப்படிபட்ட இக்கட்டான தருணத்தில், தாஜ்மகாலின் பின்புறம் 175 கோடி ரூபாய் செலவில் வணிக வளாகம் ஒன்றைக்கட்ட மாயாவதி அரசு போட்ட திட்டம் தடுக்கப்பட்டதோடு, அதில் 17 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை உச்ச நீதிமன்றம் விசாரிக்கவும் தொடங்கியது. இவ்வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்த உச்ச நீதிமன்றம், மாயாவதியையும் விசாரிக்குமாறு உத்தரவு போட்டது. இவ்விசாரணையைத் தடுத்து நிறுத்துமாறு மாயாவதி கோரியதை, வாஜ்பாயி - அத்வானி கோஷ்டி காதில் போட்டுக் கொள்ளவில்லை. மாறாக, அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது, மாயாவதியிடம் பேரம் பேசி, அதிக இடங்களைப் பெற, இந்த விசாரணையைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தலாம் எனக் கணக்குப் போட்டனர்.

பா.ஜ.க.வின் மேல்சாதி எம்.எல்.ஏ.க்கள் மாயாவதி - வாஜ்பாயிக்கு இடையே எழுந்த இந்த முறுகல் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்புக்குச் சதித்திட்டம் போட்டனர். இதை உளவறிந்து கொண்ட மாயாவதி, மந்திரிசபையைக் கூட்டி, சட்டசபையைக் கலைத்துவிட முடிவு செய்தார். ஆனால், பா.ஜ.க.வோ, மாயாவதிக்கு முன்பாக ஆளுநரைச் சந்தித்து, மாயாவதி அரசுக்குக் கொடுத்துவந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாகக் கடிதம் கொடுத்து, மாயாவதியின் திட்டத்தைத் தவிடு பொடியாக்கியது. மாயாவதி ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக முயன்று வந்த முலாயமிற்கு இந்தப் பிளவு, பழம் நழுவி, பாலில் விழுந்து, அது நழுவி வாயில் விழுந்த கதையாகிப் போனது.

சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் முலாயம்சிங் யாதவை, ''இந்துமதவெறியைத் தீவிரமாக எதிர்ப்பவர்'', ''மதச்சார்பின்மையின் காவலர்'' என்றுதான் போலி கம்யூனிஸ்டுகள் கூடப் புகழ்ந்து தள்ளுவார்கள். இப்படிபட்ட ''மதச்சார்பின்மைவாதி'' உ.பி.முதல்வராகப் பதவியேற்பதற்கு இந்து மதவெறிக் கட்சியான பா.ஜ.க.வும் மறைமுகமாக உதவியது.

மாயாவதியின் தலைமையில் இருந்த கூட்டணி ஆட்சி கவிழ்ந்தவுடனேயே முலாயம், பகுஜன் சமாஜ் கட்சியில் இருந்து எம்.எல்.ஏ.க்களை இழுக்கும் குதிரை வியாபாரத்தைத் தொடங்கி விட்டார். இந்த வியாபாரத்தின் ஆரம்பத்தில் பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த 10 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் முலாயம் முதல்வராவதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

சட்டப்படி பார்த்தால், முலாயமிற்கு ஆதரவு தெரிவித்த இந்த 10 உறுப்பினர்களின் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் மாநில ஆளுநர் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், மாநில ஆளுநர் விஷ்ணுகாந்த் சாஸ்திரி, தீவிர ஆர்.எஸ்.எஸ்.காரராக இருந்தும் கூட, கட்சி மாறி ஆதரவு தெரிவித்த உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டார். இதன் மூலம், முலாயம் முதல்வர் ஆவதற்கும் பா.ஜ.க. தடை போடவில்லை என்ற பச்சைக் கொடி காட்டப்பட்டது. இதை யடுத்துதான் பகுஜன் சமாஜ் கட்சியிலிருந்து மேலும் 27 உறுப்பினர்கள் கட்சி மாறினார்கள். முலாயமின் கூட்டணி அரசும் நம்பிக்கை வாக்கெடுப்பில் அமோக வெற்றி பெற்றது.

இது ஒருபுறமிருக்க, பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைத் தன் பக்கம் இழுக்க முலாயம் முயற்சிக்காத வரை, முலாயம் ஆட்சியைக் கவிழ்க்க பா.ஜ.க. முயற்சிக்காது என்ற மறைமுகமாக இரகசிய ஒப்பந்தமும் இரு கட்சிகளிடையே உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மாயாவதியோடு கூட்டணி சேர்ந்த பா.ஜ.க., இப்பொழுது வேறொரு கணக்குப் போடுகிறது. மாயாவதி ஆட்சியைக் கவிழ்த்ததைக் காட்டி, தனது மேல்சாதி வாக்கு வங்கியை மீண்டும் உறுதிப் படுத்திக் கொள்வது; முசுலீம்களின் நண்பனான முலாயம் அதிகாரத்தில் இருபபதைக் காட்டி, மீண்டும் அயோத்தி பிரச்சினையைத் தீவிரமாக ஊதிவிடுவது - இதன் மூலம், உ.பி.யில் இழந்து போன செல்வாக்கை மீண்டும் பெற்றுவிடலாம் என்பது பா.ஜ.க.வின் அரசியல் கணக்கு.

அத்வானி, ஜோஷி, உமாபாரதி உள்ளிட்ட ஏழு இந்து மதவெறியர்களின் மீது போடப்பட்டிருந்த பாபர் மசூதி இடிப்புச் சதி வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு வசதியாக புதிய அரசாணை வெளியிட மறுத்ததன் மூலம் பா.ஜ.க.வின் தயவில் முதல்வரான மாயாவதி தனது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டார். இப்பொழுது, முலாயம் இந்தப் பிரச்சினையில் என்ன செய்யப் போகிறார் என்பது கோடி ரூபாய்க்கான கேள்வியாக மாறி நிற்கிறது.

போலி கம்யூனிஸ்டுகள் கூட, ''முலாயமை நம்புங்கள்'' என ஜெபக் கூட்டம் நடத்துகிறார்கள். ஆனால், முலாயமோ, தனது ஆட்சி தொடருவதற்கே இந்து மதவெறியர்களையும், மேல்சாதி வெறியர்களையும்தான் நம்பிக் கொண்டிருக்கிறார். இது மட்டுமல்ல, பாபர் மசூதியை இடித்த சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கல்யாண் சிங்கின் ராஷ்ட்ரிய கிரந்தி கட்சியோடு கூட்டணி கட்டிக் கொண்டுதான் ஆட்சியையே பிடித்திருக்கிறார். திருடனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, ''ஓடுறான் பிடி, ஓடுறான் பிடி'' எனக் கத்த வேண்டிய பரிதாபகரமான நிலையில்தான் இருக்கிறார், 'மதச்சார்பின்மையின்' காவலர் முலாயம்.

இன்னும் பச்சையாகச் சொன்னால், உ.பி.யில், கல்யாண் சிங், அஜீத் சிங் ஆகியோரின் நேரடி ஆதரவோடு முலாயமின் தலைமையில் அமைந்துள்ள கூட்டணி ஆட்சிக்கும், மதச்சார்பின்மைக்கும் ஒட்டும் கிடையாது; உறவும் கிடையாது. யாதவ் - தாகூர் - ஜாட் - குர்மி ஆகிய மேல்சாதிக் கூட்டணி ஆட்சி இது. இந்த ஆட்சியை ரிலையன்ஸின் அம்பானி, சஹாரா குழும நிறுவன அதிபர் சுப்ரதா ராய், கோத்ரேஜ் ஆகிய தரகு முதலாளிகள் வெளிப்படையாகவே தாங்கிப் பிடித்திருக்கின்றனர்.

புதுப்பணக்கார கும்பலும், மேல்சாதிவெறியர்களும் கூட்டணி சேர்ந்து அமைத்துள்ள இந்த ஆட்சி நிச்சயமாக இந்து மதவெறியர்களைக் குறி வைத்துத் தாக்காது; மாறாக, தாழ்த்தப்பட்டோரையும், உழைக்கும் மக்களையும்தான் குறி வைக்கும். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இந்து மத வெறியை மூடிமறைக்க மிதவாதி வாஜ்பாயி என்ற முகமூடி பயன்படுத்தப்படுவதைப் போலவே, உ.பி.யில் அமைந்துள்ள கூட்டணி ஆட்சியின் உண்மை முகத்தை மூடிமறைக்க, ''மதச்சார்பின்மை'' பேசும் முலாயம் என்ற முகமூடி பயன்படுத்தப்படுகிறது.

● ரஹீம்

www.padippakam.com

# ''கலாச்சார காவலன்'' - தமிழக போலீசின் புதிய அவதாரம்

சென்னை - கே.கே. நகரை ஒட்டியுள்ளது எம்.ஜி.ஆர். நகர். கடந்த மாதம், இங்குள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பதினைந்து பிளஸ் டூ மாணவர்களை, கே.கே. நகர் போலீசு கிரிமினல்களைப் போல் அடித்து இழுத்துச் சென்றது. லாக்கப்பில் வைத்து உக்கிரமாக மிரட்டி பிறகு வெளியில் விரட்டியது.

சி.பி.எம். தலைமையிலான இந்திய மாணவர் சங்கத்தில் (SFI) சேர்ந்து பள்ளி நிர்வாகத்தின் கட்டாய நன்கொடை மற்றும் மோசடிகளை எதிர்த்து மாணவர்கள் போராடியதுதான் இதற்கு காரணம். ஆனால், பள்ளி நிர்வாகமும், போலீசும் வேறு கதை சொல்கிறது. அம்மாணவர்கள் ஒழுக்கங்கெட்டு, ரௌடிகள் போல் பள்ளியில் குடித்துவிட்டு கலாட்டா செய்தனர் என்கிறது.

சென்னையில் உள்ள அண்ணாநகர் டவர் - பொது பொழுதுபோக்கு இடம். இங்கு, கல்லூரி மாணவர்கள் - மாணவிகள், இளைஞர்களைப் பட்டப்பகலில் கைது செய்து இழுத்துச் சென்றது போலீசு. பொது இடத்தில் - ஒழுக்கம் கெட்ட முறையில் இவர்கள் நடந்துக் கொண்டதாகக் குற்றஞ் சுமத்தியது. கைது செய்யப்பட்ட ஆண்களை வேலூர் - சென்னை சிறைகளுக்குப் பந்தாடியது. கிரிமினல் குற்றவாளிகளைப் போல, அவர்களின் புகைப் படங்களைப் பத்திரிக் கைகளில் பிரசுரித்து அவமானப்படுத்தியது.

பொது இடத்தில் ஒழுக்கம் தவறியவர்கள், இவர்கள் என்கிறது பாசிச ஜெயா அரசின் போலீசு. போராடிய அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு குண்டாந்தடி மூலம் சட்டம் - ஒழுங்கை சொல்லிக் கொடுத்த போலீசு, இப்போது, பொழுது போக்கு இடங்களில், பொது இடங்களில் கூடியிருப்பவர்களை - குறிப்பாக, மாணவர்களையும் இளைஞர்களையும் குறிவைத்து தாக்குகிறது. அவர்கள், தரங்கெட்டுத் திரிவதாக முதலைக் கண்ணீர் வடித்து குண்டாந்தடி மூலம் கலாச்சார வகுப்பு எடுக்கிறது.

போலீசு கூற்றுப்படியே, மாணவர்கள் குடித்துவிட்டு ரௌடித்தனம் பண்ணியதாகவே வைத்துக் கொள்வோம். பள்ளியினுள் சென்று மாணவர்களை இழுத்துச் செல்ல போலீசுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? மாணவர்களுக்கு, ஒழுக்கம் - நன்னெறி பற்றி வகுப்பெடுக்க, போலீசுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அதற்கு ஆசிரியர்கள் இருக்கிறார்கள், பெற்றோர்கள் இருக்கிறார்கள். ''தலைமை ஆசிரியர் புகார் கொடுத்தார்'' என்கிறது, போலீசு. அதையும் உண்மை என்றே வைத்துக் கொள்வோம். போலீசுக்கு புத்தி எங்கே போனது? கிரிமினல்களை விசாரிக்கக் கூட ஆயிரம் சட்டக் குறுக்கீடு இருப்பதாக கூறும் போலீசுக்கு, ஒரு புகார் மனுவை வைத்துக் கொண்டு மாணவர்களை லாக்கப்பில் வைத்து விசாரிக்கும் துணிவு எப்படி வந்தது?

மாணவர்கள் பள்ளியில் என்னதான் தவறுகள் செய்தாலும் - குறிப்பாக, விடலைப் பருவத்துக்கேயுரிய குறும்புகள் இருந்தாலும் - மாணவர்களுக்குப் பாடம் புகட்ட பள்ளியில் ஆயிரம் வழிமுறைகள் நடைமுறையில் உள்ளன. உதாரணத்திற்கு, பள்ளித் திடலைச் சுத்தம் செய்வது, வகுப்பறையில் சக மாணவர்கள் முன்னிலையில் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோருவது, திருந்தாத போது பெற்றோரை வரவழைத்து, அவர்களிடம் மகன் தவறுக்கு மன்னிப்பு கடிதம் கோருவது - இப்படி ஏராளமான ஒழுங்கு நடவடிக்கைகள் நடந்தேறியுள்ளதா என்று சோதித்தறியாமல் போலீசு உடனே மூக்கை நுழைத்தது ஏன்?

காரணம், எம்.ஜி.ஆர். நகர் பள்ளி மாணவர்கள் ஒழுங்கங்கெட்டு போனது வழமையான முறையில் அல்ல! அதுதான் பிரச்சினை. பள்ளி பாடத்திட்டத்துடன் அவர்கள் நின்று விடவில்லை. மாணவர் சங்கத்தில் சேர்ந்து, பள்ளி நிர்வாகத்தின் மோசடிகளுக்கு எதிராக கேள்வி கேட்டார்கள். - இதுதான் போலீசுக்கு பிடிக்கவில்லை. எனவே, ''மாணவர்கள் பீர் குடித்தார்கள்'' என்று போலீசு, கள் குடித்த குரங்காக குதித்தது.

இதேபோல, பொழுது போக்கு இடங்களில் இளைஞர்கள், மாணவர்கள் பெண் நண்பர்களோடு பேசக் கூடாதாம்! குறிப்பாக, காதலர்கள் போல் பொது இடங்களில் தெரியக் கூடாதாம்! இதை ஒழுக்கக் கேடு என்று அறிவித்து பொது இடங்களிலேயே தண்டனை வழங்குமாம், போலீசு. சட்டம் - ஒழுங்கைப் பற்றி மட்டுமல்ல, - பண்பாடு - ஒழுக்க நெறி பற்றியும் விளக்கவுரை சொல்லும் அதிகார மையமாக போலீசு எப்போது ஆனது?

போலீசு நிலையத்தில் மாலை போட்ட காதலர்களுடன் சேர்ந்து சிரிக்கும் போலீசு, தலிபான் தீவிரவாதிகள் போல் பொது இடங்களில்

போலீசு விசாரணைக்குப் பிறகு, நடந்த சம்பவங்களை விவரிக்கும் எம்.ஜி.ஆர். நகர் பள்ளி மாணவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

நன்னெறியைத் துப்பாக்கியால் தூக்கி காட்டுவது ஏன்?

வடக்கே, பண்பாடு - ஒழுக்கம் என்ற பெயரில் இந்துமத பார்ப்பன பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. இங்கு, பண்பாடு - ஒழுக்கம் என்ற பெயரில் பார்ப்பன ஜெயா தலைமையில் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

ஒழுக்கம் - பண்பாடு என்றால் அதைப் பாதுகாப்பது, பார்ப்பன கும்பல்தான் என்பதும், உழைக்கும் மக்கள் என்றாலே அவர்கள் ஒழுக்கம் கெட்டவர்கள், காட்டுமிராண்டிகள் என்பதும்தான் மனு நீதி.

ஜெயலலிதாவின் குட்டிக் கதைகள் போலவே, நமக்கும் ஒரு குட்டிக் கதை நினைவுக்கு வருகிறது.

ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைக்க சென்றார், கலாரசிகையான ஒரு கந்தர்வ கன்னி. ஓவியக் கூடத்தின் முதல் ஓவியத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். ''என்ன இது? இந்த கோரமான படத்தை இங்கு ஏன் மாட்டினீர்கள்?'' என்றாராம். பக்கத்திலிருந்தவர் அடக்கமாக, ''நீங்கள் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிக்கிறீர்கள்'' என்றாராம்.

தமிழகத்து இளைஞர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கப் புறப்பட்டிருக்கும் பாசிச ஜெயாவின் போலீசு லீலைகளோ, பாண்டவர்களுக்கு பாடம் சொன்ன கிருஷ்ணன் லீலைகளைவிடக் கேவலமாக இருக்கிறது.

பலபேர் முன்னிலையில், அணி வகுப்பில் நின்று கொண்டிருக்கும் சக பெண் போலீசு கால் சட்டையினுள் வக்கிரமாக கை விடுகிறது போலீசு. இறுக்கமாக கால்சட்டை அணியவில்லை என்பதை அவருக்கு உணர்த்த இப்படி கைவிட்டு காண்பித்தாராம், போலீசு அதிகாரி.

ரௌடிகள் மற்றும் கிரிமினல்களைத் தண்டிப்பது என்ற பெயரில், அவர்களைச்சிறையில் விருந்தினர்கள் போல் உபசரிக்கிறது போலீசு. இதற்கு கை மாறாக, அக்கிரிமினல்களின், கொழுத்த பணத்தைப் பங்கு போடுவதுடன், ரௌடிகளின் சின்ன வீடுகளுக்கும் வாடிக்கையாளராகி சுவரேறிக் குதித்த கதைகள், இங்கு எழுதுவதற்கு உகந்தவை அல்ல.

லஞ்சம், ஊழல், திருட்டு - இவை மட்டுமல்ல. ஆபாசம், வக்கிரம், பொறுக்கித்தனம் இவற்றின் மொத்த உருவம்தான் போலீசு. தனக்கு ஒத்துவராத சக பெண் போலீசுகள் மீது ஆபாச வதந்திகளைக் கிளப்பிவிட்டு வக்கிரங்களைத் தணித்துக் கொள்ளும் போலீசு கதைகள் ஏராளம். இக்கும்பல்தான், இப்போது தமிழகத்து மாணவர்கள், இளைஞர்களின் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் வராக அவதாரம் எடுத்துள்ளது.

இப்படி, பார்ப்பனப் பாசிச ஜெயலலிதாவும், அவரது பரிவாரங்களும் தமிழகத்தை எப்படியும் பார்ப்பன கும்பலின் ராமராஜ்ஜியம் ஆக்கிவிடுவது என்று வானர படைகளாக கிளம்பிவிட்டார்கள்.

விசயம் இதுதான், மொத்த சிவில் சமூகத்தையும் கண்காணித்து வழி நடத்தும் தகுதியும் மற்றும் சிவில் சமூகத்திற்கான வாழ்க்கை நடத்தை விதிகளைத் தீர்மானிக்கும் அறிவார்ந்த பொறுப்பும் போலீசுக்கு மட்டுமே உண்டு என்று மக்களையே ஏற்க வைப்பது; இதற்கு 'ஆபத்து' நேரிடும் போது மக்களின் உயிரைக் கூட விலையாகக் கோரும் உரிமை போலீசுக்கு உண்டு; இதை விமர்சிப்பவர்கள், போலீசின் உள்ளார்ந்த நாட்டுப்பற்றையும், அதன் கடமை உணர்வையும் சீர்குலைப்பவர்கள்; இவர்களால் ஜனநாயகத்திற்கு ஆபத்து; இவர்களிடமிருந்து சமூகத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் மொத்த சிவில் சமூகத்திற்குள்ளும் தலையிடுகிறது போலீசு. இம்மாதிரியான 'நெருக்கடி'யான நேரத்தில் சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று கோரும் சிவில் உரிமையையும் பறிக்கிறது, போலீசு. ஆக, தங்கள் எல்லா நடவடிக்கைகளுக்கும் எந்த நேரத்திலும் போலீசுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் மக்கள் தான், போலீசு அல்ல!

இதில்தான் பாசிஸ்டுகளின் வெற்றியே அடங்கியுள்ளது. ''ஜனநாயகத்திற்கு ஆபத்து'' என்ற இந்த அலாவுதீன் அற்புத விளக்குதான் பாசிச போலீசின் ஒரே கைமுதல். இதை அவ்வப்போது தேய்த்து அரூபமான தீவிரவாத பூதத்தை வரவழைக்கும். பிறகு, இந்த பூதத்தை ஒழிப்பதற்கு, மொத்த சமூகத்தின் உள்ளாடையை அவர்கள் அங்கீகாரத்துடன் உருவிப் பார்க்கும்.

இப்போது இதுதான் நடக்கிறது. ரயில் பயணிகளின் மடியைத் தடவிப் பார்ப்பது, நோயாளிகளைக் கூட தீவிரவாதி என்று சோதனையிடுவது, நடு இரவில் பேருந்தை மறித்து, தூங்கும் பயணிகளை - குழந்தைகளை மிரள வைப்பது. சாலைகளில் திடீரென வாகனச் சோதனைகளில் ஈடுபடுவது, பல மணி நேரம் வாகனப் போக்குவரத்தை நிறுத்துவது, குடியிருப்புகளைச் சுற்றி வளைப்பது, சோதனையிடுவது, விசாரணைக்கு இழுத்துச் செல்வது, பிறகு எதுவும் இல்லையென்று சாவகாசமாக சொல்வது, இரவு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களை, உறங்கும் நடைபாதைவாசிகள்ளை மிரட்டுவது, அவர்கள் மிரளும்போது நக்கல் செய்வது - என்று மக்களின் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் போலீசு தலையிடுகிறது.



மும்பை குண்டு வெடிப்பையொட்டி சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் பயணிகளிடம் நடைபெறும் சோதனை: பயங்கரவாதத்தைக் காரணமாக்கி ஒட்டு மொத்த சமூகத்தையும் குற்றவாளியாக்கும் போலீசு.

இவ்வளவு அவமரியாதைகளையும், அசிங்கங்களையும் அனுபவித்த மக்களே, கடைசியில் ''போலீசு மட்டும் என்ன செய்யும்! அவர்கள் கடமையைத்தான் செய்கிறார்கள்! நாளைக்கு... ஒன்று நடந்தால், அவர்கள்தானே பதில் சொல்ல வேண்டும்'' என்கிறார்கள். இதைத்தான் - இந்த அங்கீகாரத்தைத்தான் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறது பாசிச கும்பல்.

பள்ளிக்குள் நுழைந்ததும், பூங்காங்களில் நுழைந்ததும் கூட இந்த அடிப்படையில்தான். நாளை, உங்கள் படுக்கையறையையும் சோதனை செய்வார்கள். அதற்கும் காத்திருக்கப் போகிறீர்களா? என்பதுதான் இப்போது கேள்வி.

● குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

## கர்நாடக விவசாயிகள் தற்கொலை

# தாராளமய பயங்கரவாதம்

காவிரியின் தாயகமான கர்நாடகாவில், கடந்த ஐந்து மாதத்தில் மட்டும் 275 விவசாயிகள் தற்கொலை செய்துக் கொண்டுள்ளனர்.

✱ பெல்காம் மாவட்டம், கோகக் வட்டார ஹெடஜின்ஹல் கிராமத்தில் வசிப்பவர், ஐஸ்வரப்பா பர்தோஜி. வயது 40. இவர், தனது கர்ப்பிணி மனைவிக்கும், தனது மூன்று பெண் குழந்தைகளுக்கும் விஷம் கொடுத்து குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டார். காரணம், மீள முடியாத கந்துவட்டி கடன்சுமையும் தொடர் வறட்சியால் விவசாயம் நொடிந்து போனதும்தான்.

✱ சேகப்பா, ஹவேரி மாவட்ட கண்ச்கட் கிராம விவசாயி. கடந்த ஆகஸ்ட் 4-ந் தேதி தற்கொலை செய்து கொண்டார். 4.5 ஹெக்டர் நிலம் உள்ள நடுத்தர விவசாயி இவர். தனது மகள் திருமணத்திற்காக வாங்கிய கடனை அடைக்க முடியாமல் 3 ஹெக்டேர் நிலத்தை இழந்தார். மிளகாய் மகசூலுக்கு சரியான விலையில்லாமல் மீண்டும் கடன் சுமை ஏற்பட்டதால் விவசாயத்தில் நம்பிக்கையிழந்து தற்கொலை செய்து கொண்டார்.

✱ நீலகண்டப்பா, ஷிமோகா வட்டார கேச்சிலூரு கிராமத்தைச் சேர்ந்தவர். 70 வயது முதிர்ந்த விவசாயி. நோயால், கால்கள் செயலிழந்ததால், ஏற்கெனவே கடன் சுமையில் தத்தளிக்கும் தன் குடும்பத்திற்கு தானும் சுமையாகி விடக்கூடாது என்று தற்கொலை செய்து கொண்டார். குடும்ப அவலத்தைத் தாங்க முடியாமல், அவரது மகன் சிவாரப்பாவும் தற்கொலை செய்து கொண்டார்.

கர்நாடகாவின் கடலோர மாவட்டங்களைத் தவிர மற்ற அனைத்து மாவட்ட விவசாயிகளும், குறிப்பாக மொத்தம் உள்ள 173 வட்டங்களில், 130 வட்டங்களின் விவசாயிகள் கொத்துக் கொத்தாக தற்கொலை செய்து கொள்கின்றனர். கர்நாடக மாநில முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணாவின் தொகுதியான மாண்டியா மாவட்டம் மாதூர் பகுதியில் மட்டும் 22 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

''இயற்கை 'கை' விட்டதால், பருவமழை பொய்த்ததால் பயிரைப் போலவே விவசாயியும் செத்து மடிகிறான்'' என்று கூட்டு ஒப்பாரி வைக்கிறார்கள், ஆளும் கட்சி ஓட்டுப் பொறுக்கிகள்.

கர்நாடகத்தின் சர்க்கரை கிண்ணம், நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும், காவிரியால் வளமான மாண்டியா மாவட்டத்திலும் விவசாயிகள், தற்கொலை செய்து கொள்கின்றனர். முன்னேறிய விவசாயம், நவீன பணப்பயிர் விவசாயம் என்றழைக்கப்பட்ட பகுதிகள், இப்போது வறட்சி, பஞ்சம் பாதித்த - தற்கொலை பகுதிகளாக மாறி வருகின்றன. வறிய கூலி விவசாயிகள் நாடோடிகளாக அண்டை நகரங்களில் குவிகிறார்கள். 2 ஏக்கருக்கும் குறைவான சிறு மற்றும் குறு விவசாயிகள், மீள முடியாத கடன் சுமையால், இருக்கும் நிலத்தையும் இழந்து மன உளச்சல் மற்றும் சமூக மதிப்பு இழந்து தற்கொலைக்குத் தள்ளப்படுகின்றனர். 7 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கும் நடுத்தர விவசாயிகள் கூட கடன் சுமையிலிருந்து தப்பிக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தங்கள் குழந்தை குட்டிகளுக்காக தற்கொலை முடிவைத் தள்ளிப் போட்டு உயிர் வாழும் விவசாயிகள், செத்தவர்களை 'புண்ணியவான்கள்' என்று புகழ்கிறார்கள். தங்கள் குழந்தைகளுக்குச் சோறு போட முடியாமல், எழுத்தறிவு இல்லாமல், உடல் நோய்களோடு நடைபிணங்களாக வாழ்வதை வெளியில் சொல்ல முடியாமல் கூசிப் போகிறார்கள்.

விவசாய உள்ளீட்டுப் பொருட்களான விதை, உரம், பூச்சி மருந்து, நீர் பாசனம், பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் விவசாய விளைபொருட்களுக்கான கொள்முதல் உத்திரவாதம் - இவற்றில் இனி அரசு தலையிடாது. அதாவது, இதுநாள் வரையில் விவசாயத்திற்கு கொடுக்கப்பட்ட அரசு மானியங்கள் தவணை முறையில் பிடுங்கப்பட்டு இந்திய விவசாயத்தின் கதை முடிக்கப்பட்டு விட்டது. எனவே, இக்கதையின் கதாபாத்திரங்களான இந்திய விவசாய வர்க்கம் மேடையிலிருந்து விரட்டப்படுகிறது.

இனி, இந்தியச் சந்தையில் வெறி கொண்ட மிருகங்களாக உலாவும் பன்னாட்டு நிறுவனங்களுடன் ஆட்டுக் குட்டிகளான இந்திய விவசாயிகளும் சேர்ந்து இரை தேட வேண்டும்! இது எப்படி சாத்தியம்? என்று கேள்வி கேட்கக் கூடாது!

இதுதான் தனியார்மயம் - தாராளமயத்தின் உலக நீதி!

உலக வர்த்தகக் கழகம் மற்றும் 'காட்' ஒப்பந்தப்படி, 854 விவசாய மற்றும் அதைச் சார்ந்த பொருட்களை, பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியச் சந்தையில் குவித்து விட்டன. இதன்

கடன் சுமையால் தற்கொலைக்குத் த
தகப்பனை இழந்த சவீதா தன் பாட்டியுடன் (இடது); க





படிப்பகம்

www.padippakam.com

மூலம், உள்நாட்டு விளைபொருட்கள் கேட்பாரில்லாமல் சந்தையில் குப்பையாகக் கிடக்கின்றன.

மிளகாய் முதல் தக்காளி வரை தோட்டப் பயிர்களும், கரும்பு முதல் தென்னை வரை பணப்பயிர்களும் நெல் முதல் நிலக்கடலை வரை உணவு தானியங்களும் அடிமாட்டு விலைக்குக் கேட்பாரின்றி கிடக்கின்றன. இவையெல்லாம் வறட்சி மற்றும் நோய் தாக்குதலிருந்து தப்பிப் பிழைத்த கையளவான இந்திய விளைபொருட்கள். இதற்கே இந்த கதி!




1992-இல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1500 விற்ற கரும்பு, ரூ. 1000-க்கு இப்போது வாங்குபவர் இல்லாமல் இருக்கிறது. காரணம், இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரை ஒரு குவிண்டால் ரூ. 900-க்கு சந்தையில் கிடைக்கிறது. குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 700-க்கு இருந்த நெல், இப்போது ரூ. 500-க்கு சரிந்து விட்டது. பாக்கு முதல் பருத்தி வரை, தேயிலை முதல் புகையிலை வரை இதுதான் நிலைமை. இது வரை விவசாயிகளுக்குக் கால் வயிறு கஞ்சி ஊற்றிய ஆடு, கோழி, மாடு வளர்ப்பு தொழிலுக்கும் வந்தது வேட்டு. இறைச்சி, முட்டை, பால், தயிர், நெய் எல்லாம் பளபளப்பு உறைகளில் பன்னாட்டு நிறுவனங்களின் பெயர் தாங்கி சந்தையில் கிடைக்கின்றன.

ும் கர்நாடக விவசாயக் குடும்பங்கள்:
ப் பறிகொடுத்த ஜெயலட்சுமி தன் மகளுடன் (வலது).



இந்த லட்சணத்தில், அரசு வங்கிகள் மொத்த கடன் தொகையில் வெறும் 25 சதம் மட்டுமே விவசாயத்திற்கு வழங்குகிறது. அரசின் முதலீடும் விவசாயத் துறையில் 50 சதம் வெட்டப்பட்டு விட்டது. இப்படி, விவசாயம், அரசால் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதால், நாட்டின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 65 சதம் நிலம் பாசன வசதியற்று கிடக்கிறது. இதன் விளை வாக, ஒரு ஆண்டுக்கு 73 நாட்கள் மட்டுமே விவசாய கூலிகளுக்கு வேலை கிடைக்கிறது. விவசாயிகள் உயிர் வாழ்வதற்கான ஒரே ஆதாரமான ரேஷன் அரிசி விலையையும் அரசு 70 சதம் உயர்த்தி விட்டது.

மறுபுறம், ஆண்டுதோறும் காவிரி நீர் பிரச்சினையை ஊதி, தமிழ்நாட்டுடன் வெறுப்பு மற்றும் மோதல் அரசியலை நடத்தி தங்கள் அரசியல் பிழைப்பை நடத்துகின்றனர், கர்நாடக ஓட்டுப் பொறுக்கிகள். கடந்த ஆண்டு, தமிழகத்திற்கு தண்ணீர் தர மாட்டோம் என்று களத்தில் இறங்கிய கர்நாடக சினிமா நடிகர்கள், அறிவுத்துறையினர் மற்றும் இலக்கியவாதிகள் - இப்படி எவர் ஒருவரும் இப்போது தங்கள் இனப்பற்றைக் காட்ட தெருவில் இறங்கவில்லை. அரசாங்கத்தைக் கேள்வி கேட்பது இருக்கட்டும். தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கொடுக்காத போதும், விவசாயிகள் ஏன் தற்கொலையில் சாகின்றனர் என்ற கேள்விக்குப் பதில் சொல்வதற்குக் கூடமுன் வரவில்லை, இந்த அரசியல் கழிசடைகள்.

எனவே, தற்கொலைக்கு முயலும் அன்புக்குரிய விவசாயிகள் தயை கூர்ந்து ஒரு விசயத்தைச் சிந்திக்க வேண்டும். விவசாயிகளுக்கு, விவசாய உள்ளீட்டுப் பொருட்களுக்கு அரசின் மானியம் இல்லை. விவசாய விளைபொருட்களை அரசு கொள்முதல் செய்வதில்லை. விவசாயத்திற்கு மின்சாரம் மட்டுமல்ல, ஆற்று நீரும் இனி இல்லை. விவசாயிகளுக்கு அரசுக் கடன் மட்டுமல்ல, ரேஷன் அரிசியும் இனி இல்லை. இது, கர்நாடக விவசாயிகளுக்கு மட்டுமல்ல, இந்திய விவசாயி எல்லோருக்கும் தான். இனி இதுதான் நிலைமை.

எனவே, இந்த அரசிடமிருந்து எதுவுமே விவசாயிகளுக்கு இல்லாத போது, இந்த அரசு மட்டும் விவசாயிக்கு எதற்கு? ஆதரவுக் கரம் கேட்டு வரும் விவசாயிகளை எட்டி உதைத்து தற்கொலைக்குத் தள்ளும் இந்த அரசு, மறுபுறம் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற மறுகாலனிய ஆதிக்க கொள்கைக்குச் சிவப்பு கம்பளம் விரிக்கிறது. விவசாயிகள் - தாம் பெற்ற குழந்தைகளை நடுத்தெருவில் விட்டு விட்டு தம் உயிரை வீணே போக்கிக் கொள்வதை விட, இந்த அரசைத் தூக்கியெறியும் போராட்டத்தில் ஒன்றிணைந்தால் என்ன? அதில் உயிர் போனால் என்ன?

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

## கான்கன் மாநாடு:

# வல்லரசுகளின் திட்டம் மண்ணைக் கவ்வியது

உலக வர்த்தகக் கழகத்தின் ஐந்தாவது அமைச்சர்கள் மட்ட மாநாடு, மெக்சிகோ நாட்டிலுள்ள கான்கன் கடற்கரை நகரில் செப்டம்பர் இரண்டாவது வாரம் நடந்து முடிந்தது. இந்த மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள், மெக்சிகோவின் சியாபஸ் பிராந்தியத்தில் இயங்கி வரும் ''சபாடிஸ்டா'' விவசாயிகள் போராளி இயக்கத்தின் தலைவர் மார்கோஸ், ''இது ஒரு போர்; உலக வர்த்தகக் கழகம் ஓட்டிக் கொண்டு வரும் மரணத் தொடர் வண்டி கான்கன் நகரில் தடம் புரண்டு போகட்டும்'' என உலகெங்கிலும் உலக வர்த்தகக் கழகத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

அவரது நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை. அம்மாநாடு நடந்த ஐந்து நாட்களும் - செப். 10 முதல் 14 முடிய கான்கன் நகர் ஒரு போர்க்களமாகவே மாறிப் போனது.

இந்த மாநாட்டைத் தடம்புரளச் செய்யும் நோக்கத்தோடு, மெக்சிகோவின் அண்டை நாடுகளில் இருந்தும், தொலைதூரப் பிரதேசமான ஆசிய நாடுகளில் இருந்தும், ஐரோப்பாவில் இருந்தும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், நடுத்தர வர்க்க அறிவுத்துறையினர் எனப் பல்வேறு தரப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கான்கன் நகரில் குவிந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், மாநாடு நடந்த ஒவ்வொரு நாளும் தடையரண்களை உடைத்துக் கொண்டு மாநாட்டுப் பகுதிக்குள் நுழைய முயன்றபோதெல்லாம், கான்கன் கடற்கரை போர்க்களமாகவே மாறியது. தடையரண்களைத் தகர்ப்பதில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மாநாட்டின் முதல் நாளே வெற்றி பெற்றனர். அப்பொழுது, தென் கொரியாவைச் சேர்ந்த லீ கியாங் ஹே என்ற விவசாயி, தடையரணைத் தாண்டி, மாநாட்டுப் பகுதிக்குள் நுழைந்து, தன்னைத்தானே கத்தியால் குத்திக் கொண்டு மாண்டு போனார்.

லீ கியாங் ஹேவின் மரணம் கையறு நிலையில் நடந்த, பரிதாபத்துக்குரிய சாவு அல்ல; மாவோ குறிப்பிட்டது போல, லீ கியாங் ஹேயின் தற்கொலை எதிரிக்கு எதிரான கலகம். ''எனது நாட்டு விவசாயிகளின் சாவுகளை, எனது மரணமாவது தடுத்து நிறுத்தட்டும்'' என்பதுதான் அவரின் கடைசி வார்த்தைகள்.

லீ கியாங் ஹேவின் தியாகம் வீணாகப் போய்விடவில்லை. ஏகாதிபத்தியவாதிகள் அனைவரும், இந்த மாநாட்டின் மூலம், ஏழை நாடுகளின் விவசாயத்தை முற்று முழுவதுமாகத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடவேண்டும் என்ற சதித் திட்டத்தோடு கான்கனுக்கு வந்திருந்தனர். இதற்கு ஏழை நாடுகள் வளைந்து கொடுக்காததால், ஏகாதிபத்தியவாதிகளின் எந்த நோக்கமும் நிறைவேறாமல், கான்கன் மாநாடு தோல்வியில் முடிந்துவிட்டது.

●●●

இம்மாநாட்டில், ''விவசாயம், முதலீடு, வர்த்தகம், அரசின் கொள்முதல் கொள்கையில் சீர்திருத்தம், சுங்க வரிகளைக் குறைப்பது ஆகிய புதிய விசயங்களைப் பேசித் தீர்க்க வேண்டும்'' என ஏகாதிபத்தியங்கள் விரும்பின. இதற்கு மாறாக, ஏழை நாடுகள்,

**கான்கன் நகரில் அமைக்கப்பட்டிருந்த தடையரண்களை உடைத்துக் கொண்டு, மாநாட்டுப் பகுதிக்குள் நுழைய முயலும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.**





படிப்பகம்

''மாநாட்டில் இப்புதிய விசயங்களை விவாதிக்க வேண்டியதில்லை. ஏழை நாடுகளின் வளர்ச்சிக்காக, ஏகாதிபத்திய நாடுகள் செய்வதாக ஒப்புக் கொண்டுள்ள விசயங்களைத்தான் பேசவேண்டும்'' எனக் கோரின. உலக வர்த்தகக் கழகமோ, ஜனநாயக முறைப்படி நடந்து கொள்ளாமல், கட்டப் பஞ்சாயத்துக்காரனாக மாறி, ஏகாதிபத்தியங்களின் விருப்பத்தை ஏழை நாடுகளின் மீது திணித்தது.

''ஏழை நாடுகள், தங்கள் நாட்டு விவசாயத்திற்கு வழங்கும் மானியத்தை அதிரடியாகக் குறைக்க வேண்டும். மொத்த விவசாய உற்பத்தியில் 5 சதவீதத்துக்கு மேல் மானியம் தரக் கூடாது. ஏழை நாடுகள், விவசாயப் பொருட்கள் இறக்குமதிக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்; இறக்குமதியாகும் விவசாயப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வையினையும் குறைக்க வேண்டும்'' என ஏகாதிபத்திய நாடுகள் கோரின. உலக வர்த்தகக் கழகம் இதனையே விவசாய நகல் தீர்மானமாகத் தயாரித்துச் சுற்றுக்கு விட்டது.

இந்த நகல் தீர்மானத்தை ஏற்க மறுத்துவிட்ட ஏழை நாடுகள், ''அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள்தான் விவசாயத்திற்குத் தரும் மானியத்தைக் குறைக்க வேண்டும். ஏழை நாடுகள் ஏற்றுமதி செய்யும் விவசாயப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வையைக் குறைத்து, ஏகாதிபத்திய நாடுகளின் சந்தையைத் திறந்து விட வேண்டும்'' எனக் கோரின. பிரேசில், சீனா, இந்தியா ஆகியவற்றின் தலைமையில், 23 நாடுகள் ஒரு தற்காலிக கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, விவசாய நகல் தீர்மானத்தை எதிர்ப்பதில் முன்னணியில் நின்றன.

அமெரிக்காவில் உள்ள மொத்த பருத்தி விவசாயிகளின் எண்ணிக்கை 25,000 தான்; இவர்களுக்கு ஆண்டொன்றுக்குத் தரப்படும் மானியம் 15,000 கோடி ரூபாய். அதாவது, ஒரு பருத்தி விவசாயி ஆண்டொன்றுக்கு 60 இலட்ச ரூபாய் மானியமாகப் பெறுகிறார். ஐரோப்பிய யூனியனில் பருத்தி விவசாயிகளுக்குத் தரப்படும் மானியம் ஐயாயிரம் கோடி ரூபாய். அமெரிக்காவிலும், ஐரோப்பிய குழும நாடுகளிலும் ஆண்டொன்றுக்கு 3.8 இலட்சம் கோடி ரூபாய் விவசாயத்திற்கு மானியமாகத் தரப்படுகிறது.

பல ஏழை நாடுகளின் வருடாந்திர வரவு - செலவு கணக்கு கூட, இந்த மானியத்தை எட்டிப் பிடிக்க முடியாது. ஏறத்தாழ 60 கோடி பேர் விவசாயத்தை நம்பி வாழும் நமது நாட்டில் கூட, விவசாயத்திற்குத் தரப்படும் மானியம் ஏழாயிரம் - எட்டாயிரம் கோடியைத் தாண்டாது. பல ஏழை நாடுகளில் தனிநபர் சராசரி வருமானமே நாளொன்றுக்கு நூறு ரூபாய்தான். ஆனால், ஜப்பானில் ஒரு நாளைக்கு, ஒரு பசு மாட்டுக்குத் தரப்படும் மானியம் ஏறத்தாழ முன்னூறு ரூபாய்.

அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் தங்களுக்குள்ளே ஓர் ஒப்பந்தம்



**கான்கன் நகரில் தற்கொலை செய்து கொண்டு தியாகியான தென்கொரிய விவசாயப் போராளி லீ கியாங் - ஹே.**

செய்து கொண்டு, விவசாய மானியத்தைக் குறைக்க முன்வராததால், ஏழை நாடுகளும் தங்கள் நாடுகளின் விவசாய மானியத்தை மேலும் குறைக்க மறுத்து விட்டன.

இம்மாநாட்டில் விவசாயத்திற்கு அடுத்து, ''முதலீடு'' பற்றி காரசாரமாக விவாதம் நடந்தது. ''ஏழை நாடுகளில் எந்தத் துறையில் முதலீடு செய்வது; எவ்வாறு முதலீடு செய்வது ஆகியவற்றைத் தீர்மானிக்கும் உரிமையை அரசு முற்றிலுமாகக் கைகழுவி விட வேண்டும். அந்தப் பொறுப்பை பன்னாட்டு நிறுவனங்களிடம் விட்டு விட வேண்டும். தேசிய மூலதனம், அந்நிய மூலதனம் என்ற பாகுபாடு இனி இருக்கக் கூடாது; பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் அரசு கொள்முதல் செய்ய முன்வர வேண்டும்' என ஏகாதிபத்திய நாடுகள் கோரின. ''முதலீடு தொடர்பாக உடன்பாட்டுக்கு வந்தால், விவசாயத்தில் சில சலுகைகளைத் தருகிறோம்'' என ஆசைகாட்டி ஏழை நாடுகளை வளைக்கவும் ஐரோப்பிய யூனியன் முயற்சி செய்தது. எனினும், இவ்விசயத்திலும் ஏகாதிபத்தியங்கள் தோல்வியையே சந்தித்தன.

மருந்துப் பொருட்கள் தொடர்பான காப்புரிமை சட்டம் பற்றி, உலக வர்த்தகக் கழகம், சுற்றுக்கு விட்ட நகல் தீர்மானம், ''எய்ட்ஸ், மலேரியா, காசநோய் - இவற்றை மட்டுமே கொள்ளை நோயாகக் கருத முடியும். மேலும் ஒரு நாட்டில் கொள்ளை நோய் பரவுகிறதா எனத் தீர்மானிக்கும் உரிமை, அந்த நாட்டின் அரசுக்குக் கிடையாது. மாறாக, உலக வர்த்தகக் கழகத்தின் காப்புரிமை கவுன்சில்தான் அது பற்றி முடிவெடுக்கும்'' என வரையறுத்தது இந்த நகல் தீர்மானம்.

ஏழை நாடுகளின் சுகாதாரம் - மருத்துவம் தொடர்பான அனைத்து உரிமைகளையும் பறிப்பதோடு, அமெரிக்க மருந்து நிறுவனங்களின் இலாபத்தையே குறியாகக் கொண்டிருந்ததால், இதனை ஏழை நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன.

இம்மாநாடு தோல்வியில் முடிந்திருப்பது தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடி வரும் உழைக்கும் மக்களுக்குக் கிடைத்துள்ள வெற்றி. மேலாதிக்கவாதிகளுக்கு எதிரான போர் இன்னும் முடிந்து விடவில்லை. எனினும், கான்கன் நகரில் நடந்த சண்டையில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால், தாராளமயம் - தனியார்மயத்தைத் திணித்து வரும் ஏழை நாடுகளின் ஆளுங்கும்பலும் இந்த வெற்றியில் பங்கு கேட்பதுதான் அபாயகரமானது.

நமது நாட்டை ஆளும் பா.ஜ.க.வையே எடுத்துக் கொள்ளுங்கள். உலக வர்த்தகக் கழகம் விதித்திருந்த இறுதிக் கெடு முடியும் முன்பே, விவசாயப் பொருட்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரியைப் பா.ஜ.க. குறைத்தது; விவசாய பொருட்களின் தாராள இறக்குமதியை அனுமதித்தது. வங்கி, காப்பீடு, சுரங்கத் தொழில், பெட்ரோலியப் பொருட்கள், பத்திரிகை போன்ற முக்கியமான துறைகளில் கூட, அந்நிய மூலதனம் பாய்வதற்கு பா.ஜ.க. அனுமதியளித்தது; இராணுவம் - நாட்டின் பாதுகாப்பு விசயங்களில், அமெரிக்க ஏகாதிபத்தியத்

www.padippakam.com

தோடு பா.ஜ.க., கூடிக் குலாவுகிறது. இப்படிப்பட்ட அமெரிக்க அடிவருடியான பா.ஜ.க.வை, ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகக் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

நமது நாட்டு விவசாயிகள் நெல், கோதுமை, கரும்புக்கு உரிய விலை தரக் கோருகிறார்கள். ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து அடிமாட்டு விலைக்கு விவசாயப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்யக் கோருகிறார்கள். வெட்டப்பட்ட விவசாய மானியத்தையும், இலவச மின்சாரத்தையும் மீண்டும் தரக் கோருகிறார்கள். இவற்றுக்காகதான் அவர்கள் போராடுகிறார்களேயொழிய, அமெரிக்க - ஐரோப்பிய சந்தை எங்களுக்கு வேண்டும் என்பதற்காகப் போராடவில்லை. இதைத் தர மறுக்கும் இந்திய அரசு, அமெரிக்க - ஐரோப்பிய விவசாயச் சந்தையைத் திறந்து விட்டால், இந்திய விவசாயிகளுக்கு தற்பொழுது தரப்படும் அற்ப மானியத்தையும் வெட்டுகிறோம் என மாநாட்டில் பேரம் நடத்தியிருக்கிறது.

அப்படியென்றால், இந்திய அரசு யாருக்காக மாநாட்டில் ஏகாதிபத்தியங்களோடு சண்டை போட்டது? விவசாயிகளிடமிருந்து அடித்துப் பிடுங்கி தானியங்களைக் குவித்து வைத்துள்ள மண்டி வியாபாரிகள், சர்க்கரை ஆலை அதிபர்கள், ஏற்றுமதிக்காகவே விவசாயம் செய்யும் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் - இவர்களுக்காகதான் பா.ஜ.க. அரசு, ஏகாதிபத்தியவாதிகளோடு மல்லுக் கட்டியது.

எனவே, உலக வர்த்தக மாநாட்டில், இந்திய அரசு, விவசாயிகள் - உழைக்கும் மக்கள் நலனில் இருந்து ஏகாதிபத்தியங்களை எதிர்க்கவில்லை என்பதுதான் உண்மை. பா.ஜ.க.வின் இந்த மோசடித்தனமான ஏகாதிபத்திய எதிர்ப்பு வேடத்தை அம்பலப்படுத்துவதோடு, ''தனியார்மயம் - தாராளமயத்தை நிறுத்த வேண்டும்; உலக வர்த்தக் கழகத்தில் இருந்து இந்திய அரசு வெளியேற வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன் வைத்து, ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னை விடத் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். இதே கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறு நாடுகளில் போராடி வரும் உழைக்கும் மக்களோடு இணைந்து, மேலாதிக்கவாதிகளுக்கு எதிரான உலகு தழுவிய ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும்!

● செல்வம்

# கொடி கட்டிப் பறக்குதடா கல்வி வியாபாரம்

அரசு கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, கடந்த ஆண்டு தமிழக மாணவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த ஜெயா, இந்த ஆண்டு கட்டண உயர்வு என்ற பாறாங்கல்லை அவர்களின் தலையில் தூக்கிப் போட்டுள்ளார்.

அரசு கல்லூரிகளில் நடத்தப்படும் எம்.ஏ., எம்.எஸ்.ஸி., எம்.காம்., ஆகிய முதுகலை பட்டப்படிப்புகளுக்கான கட்டணங்கள், ஏறத்தாழ 50 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளன. மாணவர்களின் போட்டி அதிகமுள்ள கணிப்பொறி (எம்.சி.ஏ.) மற்றும் வணிக மேலாண்மை (எம்.பி.ஏ.) பட்டப்படிப்புகளுக்கான கட்டணங்கள் பத்து மடங்கு - ஆயிரம் ரூபாயில் இருந்து பத்தாயிரம் ரூபாயாக - உயர்த்தப்பட்டுள்ளன. விளையாட்டுக் கல்விக்கான கட்டணம் 150 ரூபாயில் இருந்து ஐயாயிரம் ரூபாயாகவும், ஆசிரியர் பயிற்சி படிப்புக்கான கட்டணம் ஆயிரம் ரூபாயில் இருந்து ஐயாயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

முதுகலை பட்டப்படிப்பிற்கான கட்டணத்தை நேரடியாக உயர்த்தியுள்ள தமிழக அரசு, இளங்கலை பட்டப் படிப்பிற்கான கட்டணத்தை மறைமுகமாக உயர்த்தியிருக்கிறது. கணிப்பொறி அல்லாத மற்ற (இளங்கலை) பட்டப்படிப்புகளில் சேரும் மாணவர்கள், ''கட்டாய கணிப்பொறி பயிற்சி''யில் சேர வேண்டும் என உத்தரவிட்டு, அதற்கான கட்டணத்தைக் (ஆயிரம் ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை) கல்விக் கட்டணத்தோடு சேர்த்து வசூலிக்க உத்தரவிட்டுள்ளது, தமிழக அரசு.

உயர் கல்விக்கான கட்டணத்தை நிர்ணயிப்பதில், அரசே இப்படி புகுந்து விளையாடத் தொடங்கிய பின், தனியார் கல்லூரி முதலாளிகள் சும்மா இருப்பார்களா?

கடந்த கல்வியாண்டு வரை, 15,000/- ரூபாயாக இருந்த பொறியியல் கல்விக் கட்டணத்தை, இந்த ஆண்டு தமிழக அரசே முப்பதாயிரம் ரூபாயாக உயர்த்தி நிர்ணயித்தது. கல்விக் கட்டணம் இரு மடங்காக உயர்ந்த பின்னும் கூட, தனியார் கல்லூரி முதலாளிகளின் ''சேவை மனம்'' திருப்தியடையவில்லை. நடைமுறையில், தனியார் பொறியியல் கல்லூரிகளின் 'தரம்', 'தகுதி' மற்றும் மாணவன் கோரும் பாடப்பிரிவு இவற்றைப் பொருத்து, 50,000 ரூபாய் முதல் நான்கு இலட்சம் ரூபாய் வரை கட்டணம் என்ற பெயரில் மாணவர்களிடமிருந்து பிடுங்கப்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

''தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆண்டுக் கட்டணமாக 80,000 ரூபாய் வசூலித்துக் கொள்ளலாம்'' எனத் தமிழக அரசு நிர்ணயித்துள்ளது. ஆனால், தமிழகத்திலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகள் இந்த நிர்ணயிப்பை, கழிப்பறைக் காகிதம் போல ஒதுக்கி வைத்து விட்டன. அவை, ''ஆண்டுக் கட்டணம் ரூ. 2 இலட்சம் முதல் நான்கு இலட்சம் வரை; தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்'' என வெளிப்படையாகவே விளம்பரம் செய்தன.

தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில், பட்ட மேற்படிப்பிற்கான (எம்.டி.எஸ்.) கட்டணம் ஒரு இலட்ச ரூபாயில் இருந்து ஐந்து இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் அக்கல்லூரிகளிடம் ஒன்றரை இலட்ச ரூபாய்க்குள் முடிக்கப் பாருங்கள் எனப் பேரம் நடத்துகிறது.

தனியார் கலை - அறிவியல் கல்லூரிகளைப் பொருத்தவரை, அரசு எவ்விதக் கட்டணமும் நிர்ணயிக்கவில்லை. வாய்ப்பையும், வசதியையும் பொருத்து, ஒவ்வொரு கல்லூரியும் தங்களின் விருப்பம் போலக் கொள்ளையை நடத்திக் கொள்ளலாம் எனப் பச்சைக் கொடி காட்டிவிட்டது.

தமிழகத்தில் அமைந்துள்ள 240 பொறியியல் கல்லூரிகளில், 10 கல்லூரிகள்தான் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள். 633 கலை - அறிவியல் கல்லூரிகளில் 440 கல்லூரிகள் தனியாருக்குச் சொந்தமானவை; 11 பல் மருத்துவக் கல்லூரிகளில், ஒரேயொரு கல்லூரிதான் அரசுக்குச் சொந்தமானது; 36 மருந்தியல் கல்லூரிகளுள்



படிப்பகம்

www.padippakam.com

34-ம்; 37 செவிலியர் கல்லூரிகளுள் 36-ம்; 18 மருத்துவக் கல்லூரிகளுள் 6-ம்; 42 முட நீக்கியியல் மருத்துவக் கல்லூரிகளுள் 40-ம் தனியாருக்குச் சொந்தமானவை. தமிழகத்தின் உயர் கல்வியை தனியார் என்ற மலைப் பாம்பு வளைத்துப் பிடித்திருப்பதை இந்தப் பட்டியலில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

### கட்டணக் கொள்ளையே மூலதனம்

மாணவர்களின் எதிர்காலத்தைப் பணயமாக வைத்துக் கொள்ளையடிக்கும் இந்த மலைப் பாம்பை, உச்ச நீதிமன்றம், ''இரக்கமுள்ள கொடையாளிகள், ஆன்மீக அமைப்புகள்'' எனத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறது. உச்ச நீதிமன்றம், கடந்த ஆண்டு கல்வி வியாபாரிகளுக்குச் சாதகமாக அளித்த தீர்ப்பில், ''கல்வி சேவைப் பணியாக இருந்தாலும், மூலதனமிட்டு வசதிகளைத் தர வேண்டியிருப்பதால், மாணவர்களிடம் உபரித் தொகையைக் கட்டணமாக வசூலிப்பதில் தவறில்லை'' எனக் கூறி, இப்பகற் கொள்ளையை சட்டபூர்வமாக்கி விட்டது.

''மூலதனம் போட்டு வசதிகளைச் செய்து தர வேண்டியிருப்பதால்....'' என உச்ச நீதிமன்றம் நீட்டி முழக்கியிருப்பதைப் படிக்கும் பொழுது, தனியார் தங்களின் கைக்காசைப் போட்டு கல்லூரிகளை நடத்துவது போல் தோன்றலாம். ஆனால், உண்மையோ இதற்கு நேர் எதிராக இருக்கிறது.

கேரளாவில் இயங்கி வரும் ''புஷ்ப கிரி மருத்துவக் கழகம்'' என்ற தனியார் தொண்டு நிறுவனம், சமீபத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்கியது; ஆண்டுக் கட்டணம் ரூ. 4.38 இலட்சம் என நிர்ணயித்துவிட்டு, மாணவர்களிடமிருந்து 22 இலட்ச ரூபாயை வசூலித்தது.



அரசு கல்லூரிகளில் நடத்தப்படும் முதுகலை பட்டப்படிப்புகளின் கட்டணம் தாறுமாறாக உயர்த்தப்பட்டிருப்பதைக் கண்டித்து, இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இந்த வசூல் வேட்டையைப் பற்றி கேரள உயர் நீதிமன்றம் விசாரணை நடத்தியபொழுது, அக்கல்லூரி நிர்வாகம், ''ஆண்டுக் கட்டணம் போக மீதித் தொகையை நாங்கள் தனிக் கணக்கில் வைத்துக் கொண்டு, அதற்குரிய வட்டியைக் கொடுத்து விடுகிறோம்'' எனக் கூறிச் சமாளித்து விட்டது.


இப்படி மாணவர்களிடமிருந்து கறக்கப்படும் பல்வேறு விதமான கட்டணங்கள், நன்கொடைகள்; அரசு அளிக்கும் சலுகைகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டுதான் 'தனியார்' கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. மேலும், அரசு புறம்போக்கு நிலங்களைச் சுருட்டிக் கொள்ளவும், நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தில் இருந்து தப்பிக்கவும், வருமான வரி ஏய்ப்பு உள்ளிட்டு பல மோசடிகளில் ஈடுபடவும் தனியாருக்கு ''கல்வி வியாபாரம்'' கை கொடுக்கிறது.

### தரத்தின் இலட்சணம்

கௌரவமான முறையில் கொள்ளையடிப்பதற்காகவே தனியாரால் கல்லூரிகள் திறக்கப்படும் பொழுது, அதில் ''தரத்தை'' எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகிவிடும். தமிழகத்திலுள்ள தனியார் பொறியியல் கல்லூரிகளுள், 30 கல்லூரிகள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத மாட்டுக் கொட்டகைகள் என்றும், 50 கல்லூரிகள் ஏதோ சுமாராக இருக்கிறதென்றும் அண்ணா பல்கலைக் கழகமே ஒத்துக் கொண்டுள்ளது.

இப்படி தரங்கெட்ட, முறைகேடுகளில் ஈடுபடும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை வேறு கல்லூரிக்கு மாற்ற அண்ணா பல்கலைக் கழகம் முயன்றால், அதற்கு அனைத்திந்திய தொழில் நுட்பக் கழகம் தடை விதிக்கிறது. அக்கல்லூரிகளின் பல்கலைக் கழக அங்கீகாரத்தை ரத்து செய்ய முயன்றால், கல்லூரி நிர்வாகங்கள் நீதிமன்றத்தில் முறையிட்டுத் தடை வாங்கி விடுகின்றன.

வேலூரில் உள்ள ஜி.ஜி.ஆர். பொறியியல் கல்லூரி மாணவர்கள், மோசமான இந்தக் கல்லூரியில் இருந்து வேறு கல்லூரிக்குத் தங்களை மாற்றக் கோரி சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.



இந்த 80 கல்லூரிகளை ஒதுக்கிவிட்டு, மீதமுள்ள தனியார் பொறியியல் கல்லூரிகள் தரமானதா எனக் கேட்டால், பிரச்சினை வேறொரு வடிவத்தில் வெடிக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு நடத்திய இரண்டாம் மற்றும் நான்காம் பருவத் தேர்வுகளில், தனியார் பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 15 சதவீத மாணவர்கள்தான், அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். நான்காம் பருவத் தேர்வில் 140 தனியார் பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த

www.padippakam.com

மாணவர்கள், 100-க்கு 15 மதிப்பெண்களைக் கூடப் பெறவில்லை. இதுதான் தனியார் கல்லூரிகள் கொடுக்கும் கல்வியின் தரம்!

''தரம்'', ''தரம்'' எனக் கூப்பாடு போடும் அரசும், பல்கலைக்கழகங்களும் இப்படி தரமற்ற கல்லூரிகளுக்கு ஏன் அங்கீகாரம் வழங்குகின்றன என்ற கேள்வி இங்கு எழுந்து விடுகிறது. தாராளமயத்தின் பின், கல்விக் கொள்கையை கல்வியாளர்கள் தீர்மானிப்பதில்லை. உலக வங்கி சொல்லுவதற்கு ஏற்றாற்போல, ரிலையன்ஸ் அம்பானி போன்ற தரகு முதலாளிகள்தான் கல்விக் கமிட்டிகளில் உட்கார்ந்து கொண்டு தீர்மானிக்கிறார்கள்.

தனியார் கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் நடத்தும் முதலாளிகளின் கஜானா நிறைய வேண்டும் என்பதுதான் இப்பொழுது கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கம். இதற்குத் தகுந்தபடிதான் பட்டப் படிப்புகள், பாடத் திட்டங்கள், மாணவர்களின் தகுதி, கல்லூரிகளின் தரம் ஆகிய அனைத்தும் தீர்மானிக்கப்படுகிறது.

உதாரணத்திற்குச் சொன்னால், கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் காலியாகக் கிடந்தவுடனேயே, அவற்றை நிரப்ப, பொறியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்ணைக் குறைத்தார் ஜெயா. +2 தேர்வு முடிந்தவுடனேயே, அதில் தோல்வியடைந்த மாணவர்கள் உடனடியாக மீண்டும் தேர்வு எழுதும் புதிய நடைமுறை தமிழக அரசால் கொண்டு வரப்பட்டது. இது, மாணவர்களின் மீது ஜெயா காட்டும் கரிசனம் அல்ல; தனியார் கல்லூரி முதலாளிகளிடம் ஜெயா கொண்டுள்ள அக்கறை.

இந்த ஆண்டு பொறியியல் கல்விக்கான கட்டணம் முப்பதாயிரமாக உயர்ந்து விட்டதால், தனியார் கல்லூரிகளில் கிட்டதட்ட 26,000 இடங்கள் காலியாகக் கிடக்கின்றன. இதனால், ''+2 தேர்வில் 35 சதவீத மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சி பெற்றாலே, பொறியியல் படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்'' என உத்திரவிடுமாறு தமிழக அரசை கல்வி வியாபாரிகள் கோரி வருகிறார்கள்.

## ''சமூக நீதி''க்கு வேட்டு

''உயர் கல்வியில் இடம் கொடுக்க சாதியை ஒரு தகுதியாக வைக்கக் கூடாது'' என்று கூறித்தான், மேல்சாதிக்காரர்கள் இட ஒதுக்கீடு கொள்கையை எதிர்த்து வருகிறார்கள். ஆனால், அவர்கள் ஆதரவைப் பெற்ற தனியார்மயமோ, ''பணம் இருந்தால் போதும் மருத்துவராகலாம்; கணிப்பொறி விஞ்ஞானி ஆகலாம்; வேறெந்தத் தகுதியும் தேவையில்லை'' என்ற கேவலமான நிலையை உருவாக்கிவிட்டது.



ராசிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் - குரங்குச்சாவடி அருகே நடத்தி வரும் செவிலியர் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும் 39 மாணவிகளுக்கு, தேர்வு எழுத நுழைவுச் சீட்டு தர மறுத்து அடாவடித்தனம் செய்ததால், தற்கொலை செய்து கொள்ள முயன்று உயிருக்குப் போராடும் மாணவி வெண்ணிலா.

தனியார் கல்லூரிகள் இட ஒதுக்கீடு கொள்கையை ஏற்கெனவே ஓரங்கட்டி விட்டன. மருத்துவம், துணை மருத்துவம், பொறியியல் (தனியார்) கல்லூரிகளில் 50 சதவீத இடங்களுக்குதான் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும். தனியார் கலை - அறிவியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என்ற பேச்சுக்கு இடமேயில்லை. இப்படிப்பட்ட நிலையில் தனியார் கல்லூரிகளிலும், அரசு கல்லூரிகளிலும் ஒரே சமயத்தில் கொண்டு வரப்பட்டுள்ள இந்தக் கட்டண உயர்வு, இட ஒதுக்கீடு கொள்கையைச் சவக் குழிக்குள் தள்ளி விட்டுள்ளது என்றுதான் கூற வேண்டும்.

''பொறியியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்வதற்காக அரசு நடத்திய கலந்தாய்வுக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட மாணவர்களுள் பெரும்பாலோர், அதில் கலந்து கொள்ளவில்லை'' என்ற உண்மையை மறைக்க முடியாமல் அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளனர்.

''எஸ்.சி., எஸ்.டி., மாணவர்கள் பழைய கல்விக் கட்டணமான, 500 ரூபாயைக் கூட வட்டிக்குத்தான் வாங்கிவர வேண்டியிருக்கு; அதையே மூணுமடங்கு ஏத்தினா, ஏழைகளின் கல்வி ஆசை கானல் நீராக மாறிப் போகும்'' என்கிறார் ராஜா என்ற மாணவர்.

''இதைத் தடுத்து நிறுத்த என்ன செய்ய வேண்டும்?'' - கல்விக் கட்டணங்களைக் குறைக்க கோரலாம்; அதோடு, தனியார் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீட்டை கறாராக அமல்படுத்தக் கோரலாம். எனினும், இந்தக் கோரிக்கைகள் புண்ணுக்குப் புனுகு தடவுவது போன்றவைதான்!

இதற்குப் பதிலாக, ''கல்வியில் தனியாரை அனுமதிக்கக் கூடாது; மாணவர்களின் எண்ணிக்கை, தேவைக்கேற்றபடி அரசே புதிதாகக் கல்லூரிகளையும், பள்ளிக் கூடங்களையும் திறக்க வேண்டும்; ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை தாய் மொழியில் கொடுப்பதை அடிப்படை உரிமையாக்க வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழக மாணவர்கள் போராட முன்வரவேண்டும்.

இதற்கு அடிப்படையாக, அரசு கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்க்கும் மாணவர் அமைப்புகளை உருவாக்க வேண்டும். தனியார்மயத்தை எதிர்ப்பதில் இரட்டை வேடம் போடும் ஓட்டுக் கட்சிகளின் மாணவர் சங்கங்களைப் புறக்கணிக்க கோர வேண்டும்; தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்களோடும், விவசாயிகளோடும் மாணவர்கள் ஒன்று கலக்க வேண்டியதன் அவசியத்தை அவர்களிடம் வலியுறுத்த வேண்டும்.

● சுப்பு



படிப்பகம்

# பாமரர்களின் பக்தியே ஆர்.எஸ்.எஸ்.-இன் அடித்தளம்!

விவேகானந்தர் பாறை நினைவகம் மற்றும் விவேகானந்தர் கேந்திரா ஆகியவற்றை நிறுவி, கன்னியாகுமரி நகரின் பாதிக்கும் மேலான பகுதிகளை வளைத்துப் போட்டுக் கொண்டதும் ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பன கும்பல் துணிச்சலடைந்து தனது கைவரிசையைத் தொடங்கியது. ஒருபுறம், நெல்லையில் 400-க்கும் மேற்பட்ட கிறித்தவக் குடும்பங்களை விசுவ இந்து பரிசத்தின் பெயரால் மீண்டும் இந்து மதத்துக்கு மதம் மாற்றியது. மறுபுறம், இசுலாமிய மற்றும் கிறித்தவ அமைப்புகளின் மதமாற்றும் முயற்சிகளை தடுத்து விட்டதாகப் பீற்றிக் கொண்டது.

ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பனர்கள் என்னதான் நாயாகக் குரைத்தாலும், சமுதாயத்தில் சாதிய ஒடுக்குமுறை நீடிக்கும் வரை மதமாற்றத்தைத் தடுக்க முடியாது. இதை நிரூபிக்கும் வகையில், நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட 600 குடும்பங்கள் இசுலாமிய மதத்துக்கு மதம் மாறி ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பனர்களின் முகத்தில் கரிபூசின.

இது கண்டு பதறிப்போன இந்து மதவெறியர்கள் அலறி அடித்துக் கொண்டு மீனாட்சிபுரத்தில் குவிந்தனர். அதுவரையிலான சாதி அடக்குமுறைகளைக் கண்டு கொள்ளாமல் இருந்த ஆர்.எஸ்.எஸ் பார்ப்பனர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கரிசனை பொங்கி வழியத் தொடங்கியது. *"உடனடியாக பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்கு சங்க சுவயம் சேவர்கள் அக்கிராமத்திற்குப் பாய்ந்து சென்றார்கள். மீனாட்சிபுரம் சம்பவத்துக்கு செய்தி ஊடகம் பெரும் விளம்பரம் கொடுத்தது. மீனாட்சிபுரத்தில் ஆரிய சமாஜம் சில நடவடிக்கைகளைத் தொடங்கியது. ஒரு சங்கப் பயிற்சிக் குழு தொடங்கப்பட்டது. பல சன்னியாசிகள், மடாதிபதிகள் மற்றும் சமூகத்தலைவர்கள் பங்கேற்புடன் ஒரு இந்து மாநாடு நடத்தப்பட்டது. மதம் மாறியவர்கள் இந்து மதப்பிடிக்குள் மெதுவாகத் திரும்பிவரத் தொடங்கினார்கள். தற்போது ஒரு சில குடும்பங்கள்தாம் முசலீம்களாகத் தொடர்கிறார்கள்."* (தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து எழுச்சியின் கதை, ஆர்.எஸ்.எஸ். வெளியீடு; பக். 19)

ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பனர்கள் என்னதான் முயன்றும் மதம் மாறியவர்களைத் திரும்ப "இந்து" மதத்திற்கு இழுக்க முடியவில்லை என்பதுதான் உண்மை. ஜெயலலிதா அரசு மதமாற்றத்தடைச் சட்டம் பிறப்பித்ததை பொட்டி மீனாட்சிபுரம் சென்ற பத்திரிக்கையாளர்கள் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தஞ்சையில் நடந்த ம.க.இ.க.வின் பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில் மீனாட்சிபுத்தில் மதம் மாறியவர்களின் பிரதிநிதிகள் நேரில் தோன்றி சாட்சியம் அளித்துள்ளனர்.

ஒரு சில ஊசலாட்டக்காரர்களை மட்டும் ஆர்.எஸ்.எஸ்.-பார்ப்பனர்கள் விலைக்கு வாங்க முடிந்தது. அவர்களையும் மதம் மாற்றினால் எந்த சாதியில் வைப்பது என்ற பிரச்சினையை எதிர்கொண்டதால், இதைத் தவிர்ப்பதற்குத்தான் ஆரியசமாஜிகளைக் கொண்டுவந்து நாடகமாடினார்கள். அதாவது, சாதி வர்ண அடையாளம் குறிப்பிடாமல் இந்து மதத்திற்கு மதமாற்றுவது என்கிற வேலையை செய்யும் ஆரிய சாமாஜத்தை முன்னிறுத்தி பித்தலாட்டம் செய்தார்கள்.


**இந்து மதவெறியூட்டி கலவரங்களைத் தூண்டுவதற்காகவே பொறுப்பேற்றுள்ள இந்து முன்னணித் தலைவர் இராம கோபாலன்.**



மீனாட்சிபுரம் மதமாற்றத்தால் அதிர்ச்சி அடைந்த ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பனர்கள் உடனடியாக தனது சங்க உறுப்பினர்கள் அனைவரையும் பிராந்திய அமர்வு என்ற பெயரில் கூட்டி ஆலோசித்தனர். ஆர்.எஸ்.எஸ். மேலிடப் பார்ப்பனர்கள் முன்னிலையில் அந்த ஆலோசனை நடந்தது. *"சாதி மோதல்கள் மற்றும் அரிசனங்கள் இசுலாத்திற்குப் போகும் மதமாற்றங்கள் குறித்து முழுமையாக ஆலோசனைகள் நடந்தன. இம்மாதிரியான முயற்சிகளை எதிர்ப்பதற்காக, இந்து சமுதாயத்தைத் தயார் செய்வதற்கு வேண்டி ஒரு மக்கள்திரள் இயக்கத்தை சங்கம் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்து முன்னணி என்ற பெயரிலான புதிய அமைப்பின் பொறுப்பு, தமிழ்நாடு பயிற்சிக் குழுவின் பிராந்திய பிரச்சாரகர் திரு. இராம கோபாலனுக்குத் தரப்பட்டது. பதற்றமான பல்வேறு இடங்களுக்கு இராம கோபாலன் சுற்றுப்பயணம் செய்வதற்கான திட்டம் அந்த அமர்விலேயே நன்கு திட்டமிடப்பட்டது. புதிய அமைப்பான இந்து முன்னணி பற்றிய செய்தி எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரமாகத் தரப்பட்டது. ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், ஆர்ய சமாஜம் மற்றும் பிற சகோதர அமைப்புகள் இணைந்து பல இந்து எழுச்சி மாநாடுகள் நடத்தின. அந்தக் கூட்டமைப்பு இந்து ஒற்றுமை மையம் என்றழைக்கப்பட்டது. இந்து சன்னியாசிகள், மடாதிபதிகள் மற்றும் பிற சமுதாயத் தலைவர்கள் பங்கேற்ற மாநாடுகளுக்கு நல்ல வரவேற்புகள் கிடைத்தன."* (மேற்படி நூல், பக். 19-20)

ஆக, ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பனர்கள் நேரடியாக மக்களை அணுகுவதற்குத் தயாராக இருந்ததில்லை. அவர்கள் தமது சித்தாந்தம், கொள்கைகளை மட்டுமல்ல; அமைப்புகளையும் ஒளித்து வைத்துக் கொண்டு, வெவ்வேறு பெயர்களில் புகுந்து

www.padippakam.com



**சென்னை திருவல்லிகேணி ஐஸ் அவுஸ் மசூதியருகே தாரை தப்பட்டைகள் முழங்க முசுலீம் எதிர்ப்பு கூச்சலிட்டுக் கொண்டு செல்லும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம்.**

கொண்டு, பாமர மக்களின் பகுத்தறிவற்ற நிலையைப் பயன்படுத்தி இந்து மதவெறியைப் பரப்பவே விழைகின்றனர் என்பது தெளிவாகிறது. ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பனன் இராம கோபாலன் திட்டமிட்டவாறு ''பதற்றமான'' பல இடங்களுக்குப் போய் இந்துமத வெறியேற்றி, ''கலவரங்க''ளைத் தூண்டுவதையே செய்து வருகிறார். இந்த வகையில் அவர்களுக்குத் துவக்கப் புள்ளியாக அமைந்தது மண்டைக்காடு ''கலவரமா''கும். குறிப்பாக, மீனாட்சிபுரம் மதமாற்றத்திற்கு ஈடுகொடுப்பதற்காக மண்டைக்காடு ''கலவரத்தை''திட்டமிட்டு நடத்தினார்கள்.

மண்டைக்காடு கலவரம் குறித்து பின்வருமாறு ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பனர்கள் புளுகி வருகின்றனர். *''மீனாட்சிபுரம் சம்பவத்திலும் பாறை நினைவகம் நிறுவியதிலும் இந்து எழுச்சியைக் கண்ட கிறித்தவ சபையினர் கலக்கமுற்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி வேலைகளால் இந்து விழிப்புணர்ச்சி மற்றும் எழுச்சியை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சில தொந்தரவுகள் - தொல்லைகளை உருவாக்குவதற்காக அவர்கள் காத்திருந்தனர். குமரி மாவட்டம், மண்டைக்காடு என்ற இடத்தில் பிரபலமான பகவதிதேவி கோவில் ஒன்றுள்ளது. மண்டைக்காடு கோவில் விழாவின்போது ஒவ்வொரு ஆண்டும் பெரிய திருவிழா நடப்பதுண்டு. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள், பெரும்பாலும் பெண்கள் தமிழ்நாட்டிலும் கேரளாவில் இருந்தும் வந்து கூடி, கடலில் நீராடிய பிறகு பகவதிதேவியை வழிபடுவார்கள்.*

*''கடல் எங்களுக்குச் சொந்தமானது; இந்துக்கள் எவரும் கடலில் நீராட அனுமதிக்க முடியாது என்று பாதிரியார்களால் தூண்டிவிடப்பட்ட கிறித்தவ மீனவர்கள் அறிவித்தார்கள். இந்துப் பெண் பக்தைகள் தமது பாரம்பரியப்படி கடலில் நீராடப் போன போது கிறித்தவர்கள் ஆட்சேபித்தார்கள். பெரும் எண்ணிக்கையிலான இந்துப் பெண்கள் கடலில் நீராட இறங்கியபோது, கரையிலிருந்த அவர்களின் ஆடைகளை எடுத்துக்கொண்ட கிறித்தவர்கள் ஏளனம் செய்து அவமானப் படுத்தத் தொடங்கினார்கள். சில பெண்கள் புகலிடம் தேடி நிர்வாணமாக ஓடினார்கள். இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது சபை மணி ஒலிக்கப்பட்டது. அதன் மூலம் ஏற்கனவே திட்டமிட்டபடி கிறித்தவர்கள் அனைவரையும் ஒன்றுதிரளும்படி அழைக்கப்பட்டார்கள்; ஒரு யுத்தம் போன்ற நிலைமை உருவாக்கப்பட்டது. இந்து ஆண்கள் - பெண்களுக்கு அரணாக சங்க சுவயம் சேவகர்களும் இந்து முன்னணித் தொண்டர்களும் மட்டுமே நின்று பெண் பக்தைகளின் மானத்தைக் காத்தனர்.''* (மேற்படி நூல், பக். 21)

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் இராம கோபாலன் தலைமையில் இந்து முன்னணி தொடங்கிய பின், கிறித்தவர்களுக்கு எதிரான அவதூறு பரப்பி கலவரத்தைத் தூண்டும் சதிச் செயலின் விளைவுதான் மண்டைக்காடு சம்பவமாகும். ஆர்.எஸ்.எஸ். தொடங்கிய காலம் தொட்டு நாடு முழுவதும் இப்படிப்பட்ட சதிச் செயல்கள் மூலமாகத்தான் செல்வாக்குப் பெறவும் மாற்று மதத்தினர் மீது வீண்பழிபோட்டு கலவரங்களையும் மதவெறிப் படுகொலைகளையும் நடத்தி வருகின்றனர்.

அயோத்தியில் இசுலாமியர்கள் தொழுகை நடத்தி வந்த பாபரி மசூதிக்குள் கள்ளத்தனமாக, இரவோடு இரவாக ராமன் - சீதை பொம்மைகளை வைத்துவிட்டு, அது ராமன் அவதரித்த பூமி என்று புளுகி, இப்பொழுது பெரும் பிரச்சினையாக்கி கலவரங்களையும் மதப்படுகொலைகளையும் ஆர்.எஸ்.எஸ். சதிகாரர்கள் நடத்திவருவதை நாடே அறிந்துள்ளது.

தமிழ்நாட்டில் முன்பு ஒருபோதும் இல்லாத ஒரு வழக்கமாக, கடந்த சில ஆண்டுகளாக சென்னை மாநகரின் மூலைமுடுக்கெல்லாம் விநாயகர் பொம்மைகளை வைத்து பெரிய அளவில் ''விநாயக சதுர்த்தி'' கொண்டாடி, இறுதியில் ஊர்வலம் நடத்தி கடலில் கரைக்கும் முறையைப் புகுத்தினர். மசூதிகளுக்கும், கிறித்தவ சபைகளுக்கும் அருகே விநாயகர் பொம்மைகளை வைப்பதும், அவர்களின் வழிபாட்டு நேரத்தில் போட்டியாக ஒலி பெருக்கிகள் வைத்து பாட்டுப் போடுவதும், இறுதிநாளில் வேண்டுமென்றே திருவல்லிக்கேணி பெரிய மசூதி மற்றும் ஐஸ்ஹவுஸ் மசூதிகள் உள்ள சாலைவழியே வேட்டுகள் போட்டு, தாரை தப்பட்டை முழங்க தொழுகை நேரத்தில் ஊர்வலம் போவதும், இசுலாமியருக்கு எதிராக கூச்சல்கள் போடுவதும் செய்கிறார்கள். மார்வாடிகளிடம் நிதி வசூலித்து பொறுக்கி - ரௌடிப் படைகளைக் கூலிக்குத் திரட்டி, இசுலாமியர் கடைகளைத் தாங்கி, ஆத்திரமூட்டி கொலைவெறி ஆட்டமும் போடுகின்றனர். இதை தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக முசுலீம்கள் பெரும்பான்மையாக வாழும் கீழக்கரை வரை விரிவு படுத்தியுள்ளனர்.

புதுப்புதுப் பிரச்சினைகளைக் கிளப்பி மதச் சிறுபான்மையினருக்கு எதிராக வெறுப்பையும் வெறியையும் தூண்டுவதுதான் ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பனர்களின் வழக்கமாக உள்ளது. பெல்காமில் பல ஆண்டுகளாக இசுலாமியர்கள் தொழுகை நடத்தி வரும் ஈத்கா மைதானம், ஒரு பழைய இந்து அரசிக்குச் சொந்தமானது என்று கடந்த சில ஆண்டுகளாக உரிமை பாராட்டி, அங்கு ''தேசிய''க் கொடியேற்றும் தகராறு செய்து வருகின்றனர். மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சியில் ஒரு தர்கா பல ஆண்டுகளாக உள்ளது. அங்கே போய் கார்த்திகை தீபம் ஏற்றியே தீருவோம் என்று கொக்கரிக்கிறார் பார்பன வெறியன் இராம கோபாலன்.


படிப்பகம்

www.padippakam.com

இப்படிப் பலநூறு எடுத்துக்காட்டுகள் கூற முடியும். இந்த வரிசையில் ஒன்றுதான் மண்டைக்காடு சம்பவம். ஆண்டுதோறும் உள்ளூர் அளவில் அமைதியாக நடக்கும் பூசை - விழாவில் கடலில் நீராடுவது என்ற சடங்கைப் புகுத்தி, இந்துப் பெண்கள் அவமானப்படுத்தப்பட்டதாகப் புரளி கிளப்பி, கேரளத்திலிருந்து இறக்குமதி செய்த குண்டர்களைக் கொண்டு, மீனவக் கிராமங்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தினார்கள் ஆர்.எஸ்.எஸ்-பார்ப்பனர்கள். இதையே கிறித்தவ மீனவர்களுக்கும் இந்து நாடார்களுக்கும் இடையிலான கலவரமாக வளர்த்து போலீசு துப்பாக்கிச் சூடு, பலி என்று மாற்றிவிட்டார்கள். அவர்களே, 'பல்லாயிரக்கணக்கான இந்து பக்தர்களும் கிறித்தவர்களும் திரண்டு ''யுத்தம் போன்ற'' நிலைமை தோன்றியது; அந்த சமயம் சேவகர்களும் இந்து முன்னணி தொண்டர்களும் அரணாக நின்று பெண்களின் மானம் காத்தார்கள்; எவ்வித வன்முறையும் நிகழாமல் அமைதியாக நல்லபடி நடந்து முடிந்தது' என்றுதான் எழுதியுள்ளனர்.

கடலில் நீராடிக் கொண்டிருந்த பெண் பக்தர்களின் ஆடைகளை எடுத்துக் கொண்டு ஏளனம் செய்தார்கள், நிர்வாணமாக ஓடவைத்தார்கள் என்பதெல்லாம் கிறித்தவர்களுக்கு எதிராக வெறியூட்டக் கிளப்பிவிட்ட வதந்தி. அவர்கள் இவ்வளவுபேர் திரண்டும், மோதலோ, வன்முறையோ வெடிக்காத போது ''கலவரம்'' என்று கூறுவது ஏன்?

*''எம்.ஜி.ஆர்.அரசாங்கத்தால் ஒரு விசாரணைக் கமிசன் அமைப்பதற்கு மண்டைக்காடு கலவரம் வழிவகுத்தது. அம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டுமானால், மதமாற்றத்தைத் தடை செய்யும் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று அந்த விசாரணைக் கமிசன் பரிந்துரை செய்தது.''* (மேற்படி நூல், பக். 22) என்று கூறுகிறது ஆர்.எஸ்.எஸ் கும்பல். மண்டைக்காடு சம்பவம் குறித்த விசாரணைக் கமிசன் நடந்து முடிந்த கலவரம் - வன்முறை குறித்து, அதற்கான குற்றவாளிகள், காரணகர்த்தாக்கள் குறித்து எதுவும் தீர்ப்பு வழங்கியதாக ஆர்.எஸ்.எஸ் கும்பல் எழுதவே இல்லை. வெறுமனே ''கலவரம்'' என்று எழுதுவதன் மூலம் தமது பங்கை மூடிமறைக்கிறது என்பதுதான் உண்மை.

அதன் பிறகு நெல்லை மாவட்டம் சிவகிரி, புளியங்குடி பகுதியிலும், வேலூர் மாவட்டம் ஆம்பூர், வாணியம்பாடி பகுதியிலும் இசுலாமியர்களுக்கு எதிரான மதவெறிக் ''கலவரங்களை''த் தூண்டிவிட்டனர். தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் வெடிப்பதும், சாதி அடக்குமுறைகளில் இருந்து விடுபட மதம் மாறுவதும் ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பனர்களின் தீராத பிரச்சினையாக வெடித்தது. சாதிக் கலவரங்களை மதக் கலவரங்களாக மாற்றுவதற்குத் தொடர்ந்து எத்தணித்து வருகிறார்கள்.



பக்தியின் பெயரால் பெண்களை ஈர்த்து இராமேஸ்வரம் கோயிலில் நடத்தப்பட்ட விளக்கு பூசை: ஆர்.எஸ்.எஸ். விரிக்கும் வஞ்சக வலை.

*''சுயநல அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்பட்டு பல்வேறு சாதிகளுக்கிடையிலான வெறுப்பும் மோதல்களும் அதிகரித்து வருகின்றன. இது இந்து ஒற்றுமைக்கு இடையூறாக இருக்கின்றது. இந்தப் பெரும் சவால்களை சுவயம் சேவகர்களும் இந்து செயல் வீரர்களும் எதிர்கொள்ள வேண்டி உள்ளது; அவர்கள் தமக்குச் சாதகமான நல்லதொரு இந்துச் சூழலை உருவாக்கக் கடுமையாக உழைக்க வேண்டும்.''* (மேற்படி நூல், பக். 36)

சாதகமான நல்லதொரு இந்துச் சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சதித்தனமாக பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவற்றில் முக்கியமானது பாமரர்கள் பக்தியைக் கேடாகப் பயன்படுத்துவதாகும்.

*''விநாயக சதுர்த்தி விழாவின் போது, பொதுஇடங்களில் விநாயகர் சிலைகளை வைப்பதை - பின்தங்கிய குடிசைப் பகுதிகள் எனப்படுபவை உட்பட பெருநகர்களின் பல்வேறு பகுதிகளிலும், நகரங்களிலும் பலகிராமங்கிலும் மக்களிடம் வரவேற்பைப் பெறுகின்றன. ஆயிரக்கணக்கான விநாயகர் சிலைகளை நிறுவி, நீரில் மூழ்க வைக்கும் நாளன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன.*

*''கோவில் பாதுகாப்புக் கமிட்டிகள் பக்தர்களைத் திரட்டுகின்றன. மதுரையில் பிரம்மாண்டமான கோவில் வளாகம் முழுவதையும் சுத்தம் செய்யும் பணியில் சமூகத்தின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றார்கள். பெண்களுக்காக நடந்த கிரமமான இந்தப் பூசை திட்டத்திற்கு - விளக்குபூஜை நடத்துவதற்குகூட இந்து சமூகத்தின் எல்லாப் பிரிவினரும் ஈர்க்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுரை மீனாட்சி கோவிலில் நடந்த விளக்கு பூசை நினைவுகூறத்தக்க ஒரு கொண்டாட்டமாகும். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.*

*''திருநெல்வேலி, நெல்லையப்பர் கோவில் (சிவன் கோவில்) ஈடுஇணையற்ற மற்றொரு திட்டமாகும். அது ஒரு ஜெப வேள்வியாகும். ஆயிரக்கணக்கான பக்தர்களும் புனிதமான மிருத்யஞ்ஜயா மகா மந்திரத்தைக் கற்றுக் கொண்டு எல்லோருமாக சேர்ந்து நான்கு மணி நேரத்தில் மகா மந்திரத்தை ஒரு கோடி முறை ஜபம் செய்து வேள்வியை முடித்தனர். இந்த நூதனத் திட்டம், ஆன்மீகச் சூழலால் நகரம் முழுவதையும் சூடேற்றிவிட்டது.''* (மேற்படி நூல், பக். 31).

இவ்வாறு கோவில்களில் விளக்கு பூசைகள், ஆராதனைகள், வேள்வி - யாகங்கள், குடமுழுக்குகள், அர்ச்சனைகள், கோவில் வளாகங்களை சுத்தப்படுத்துதல், அன்னதானங்கள் என்று பல்வேறு வடிவங்களில் பக்தி, மதவிழா, ஆன்மீக வகுப்பு என்கிற பெயரில் பாமர மக்களை ஈர்த்து அவற்றின் மூலம் அரசியல் ஆதாயம் திரட்டிக் கொள்கின்றனர். ஒவ்வொரு வீடு-கிராமமாக செங்கல் சேகரித்துக் கொண்டுபோய் செங்கல் பூசை நடத்தி அயோத்தியில் ராமன் கோவில் கட்டும் திட்டம் என்பது போல, புதுப்புது முறைகளில் பக்தி-மதம்-மதவெறி மத ரீதியிலான தேசியம், அரசியல் — இதுதான் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் வழிமுறையாக உள்ளது.

(தொடரும்)


படிப்பகம்

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

வீச்சரிவாள் என்று தங்கள் மரபுவழி ஆயுதங்களுடன் களத்தில் இறங்கினர். விடிவதற்குள் 40 இறால் குட்டைகள் அடித்து நொறுக்கப்பட்டன. 4 குட்டைகளில் நஞ்சு கலக்கப்பட்டது.

கிராம மக்களின் எழுச்சியைத் தடுக்க முடியாமல் நின்ற இறால் பண்ணை உரிமையாளர்கள், கிள்ளை போலீசுக்கு தகவல் கொடுத்தனர். அங்கு வந்த போலீசு உதவி ஆய்வாளர் குமார் மற்றும் ஒரு ஏட்டை பெண்கள் வழிமறித்து ஒரு வீட்டிற்குள் சிறை பிடித்து அவர்களிடமிருந்து செல் போனையும் பறித்துக் கொண்டனர்.

உதவி ஆய்வாளர் சிறைபடுத்தப்பட்டதை அறிந்து டி.எஸ்.பி. பழனி துப்பாக்கியோடு நான்கு போலீசையும் அழைத்து வந்தார். அவர்களையும் மிளகாய் பொடி தூவி, கற்களை வீசி சிறைபிடித்தனர், பெண்கள். இதனால் அரண்டு போன போலீசு துறை, கடலூரிலிருந்து 300-க்கும் அதிகமான போலீசையும், அக்னி வர்ஷா, வஜ்ரா போன்ற நவீன வாகனங்களையும் கொண்டு வந்து இறக்கி மக்களைச் சூறையாடத் தொடங்கியது. சுமார் 120 பேர் மீது கடுமையான குற்றப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து 92 பேரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

போலீசின் அடக்குமுறை போர்க்குணம் கொண்ட மக்களை அச்சுறுத்தவில்லை. அம்மக்களுக்கு ஆதரவாக விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் அப்பகுதியில் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொண்டனர். மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் வழக்கை இலவசமாக நடத்துவதாக போராளிகளைச் சிறையில் சந்தித்து உறுதியளித்துள்ளனர்.

ஏற்றுமதி நோக்கத்துக்காகவே அமைக்கப்படும் இறால் பண்ணைகளால் அன்னிய செலாவணி பெருகும் என்று வக்காலத்து வாங்குபவர்கள், அதனால் வாழ்க்கையையும் இயற்கை வளங்களையும் இழந்து தவிக்கும் பல இலட்சக்கணக்கான விவசாயிகளைப் பற்றி பேச மறுப்பது ஏன்? என்று கேள்வியெழுப்பி கடந்த எட்டாண்டுகளுக்கு முன்பு தமிழகம் தழுவிய அளவில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு இறால் பண்ணை அழிப்பு போராட்டத்தைத் தொடங்கியது விவசாயிகள் விடுதலை முன்னணியும், மக்கள் கலை இலக்கியக் கழகமும் அதன் தோழமை அமைப்புகளும்.

இன்று பாதிக்கப்பட்ட விவசாயிகளும், மீனவர்களும் நேரிடையாக களத்தில் இறங்கி இறால் பண்ணைகளை அழித்துள்ளனர். நாடு மறுகாலனியாவதின் ஒரு அங்கம்தான் இறால் பண்ணைகள் என்பதை அரசியல் தளத்தில் இவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.

ஆனாலும், இம்மக்கள் தங்களின் போர்குணமிக்க போராட்டத்தின் மூலம், தாராளமயத்தால் வாழ்க்கை இழந்து, எப்படி போராடுவது என்று தெரியாமல் தவிக்கும் பல கோடி விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் முன் மாதிரியாக, புதிய திசையைக் காட்டியுள்ளனர்.

**அழிக்கப்பட்ட இறால் குட்டையில் செத்துக் கிடக்கும் மீன்கள்.**



– **பு.ஜ. செய்தியாளர்கள், கடலூர் - சிதம்பரம்.**

## நேபாள மாவோயிசப் புரட்சியாளர் கைது! இந்திய அரசின் எதிர்ப்புரட்சி வேலை!

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்)யின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான தோழர் சந்திர பிரகாஷ் கஜுரேல் என்கிற கௌரவ், கடந்த ஆகஸ்டு 20-ம் தேதியன்று சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னையிலிருந்து லண்டன் வழியாக ஐரோப்பா செல்லவிருந்த அவரை, போலி கடவுச் சீட்டு மூலம் பயணம் செய்ய முற்பட்டதாகக் குற்றம் சாட்டி போலீசார் அவரைக் கைது செய்து சென்னை மத்திய சிறையில் அடைத்துள்ளனர். அவரை நேபாள அரசிடம் ஒப்படைக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

நேபாளத்தில் மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஜனநாயக அரசை நிறுவவும் மாவோயிஸ்டுகள் ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், தமது நாட்டில் நடந்து வரும் நியாயமான மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்தில், கட்சியின் முடிவுப்படி ஐரோப்பிய நாடுகளில் பிரச்சாரம் செய்வதற்காக தோழர் கௌரவ் சென்னையிலிருந்து விமானத்தில் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே, மன்னராட்சிக்கு எதிராகவும் மக்கள் ஜனநாயக அரசை நிறுவவும் போராடிய கம்யூனிசப் புரட்சியாளர்கள் பலர் நேபாள அரசால் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் தோழர் கௌரவ் அவர்களை நேபாள அரசிடம் ஒப்படைத்தால் அவரது உயிருக்கு ஆபத்து நேரிடும்.

கம்யூனிசப் புரட்சியாளர்கள் தலைமையில் நடந்து வரும் போராட்டத்தைக் கொடூரமாக ஒடுக்கி வரும் நேபாள அரசுக்கு இந்திய அரசு, ஆயுத உதவி அளித்து வருவதோடு இராணுவத் தளபதிகளை அனுப்பி ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. பாசிச ஜெயா அரசோ இன்னும் ஒருபடி முன்னேறி தமிழக நேபாளிகள் சங்கத்தை தீவிரவாத பட்டியலில் சேர்த்து, அப்பாவி கூர்க்காக்களை விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தி வருகிறது. அதேசமயம் அன்று சீனாவின் திபெத்தில் விவசாயிகளின் நிலப்புரட்சிப் போர் தீவிரமடைந்தபோது தப்பியோடி வந்த தலாய்லாமா கும்பலுக்கு அடைக்கலம் அளித்ததோடு, திராட்சைத் தோட்டங்களையும் தேயிலை எஸ்டேட்டுகளையும் இலவசமாக அளித்து இந்திய அரசு ஆதரித்தது. ஏனெனில் தலாய்லாமா ஒரு எதிர்ப்புரட்சி கும்பல். ஆனால் தோழர் கௌரவ், நேபாள மன்னராட்சிக்கும் இந்திய மேலாதிக்கத்துக்கும் எதிராகப் போராடிவரும் ஒரு கம்யூனிசப் புரட்சியாளர். எனவேதான், இப்புரட்சியாளரைப் பிடித்து கொலைகார நேபாள ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கும் எதிர்ப்புரட்சி வேலையில் இந்திய அரசு இறங்கியுள்ளது.

இந்நிலையில், பிற்போக்கு - எதிர்ப்புரட்சி இந்திய அரசை அம்பலப்படுத்தி, "தோழர் கௌரவ் அவர்களை விடுதலை செய்! கொலைகார நேபாள அரசிடம் அவரை ஒப்படைக்காதே!" என்று உரத்த குரலெழுப்புவதே புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் இன்றைய உடனடி கடமையாக உள்ளது.

●●●

www.padippakam.com



## கலகத்தில் அதிருப்தியாளர்கள் கலக்கத்தில் சி.பி.எம்.

கடந்த செப்டம்பர் 23-ஆம் தேதியன்று நடைபெற்ற கேரளத்தின் எர்ணாகுளம் தொகுதி இடைத்தேர்தலில் சி.பி.எம். கட்சி, செபாஸ்டியன் பவுல் என்ற சுயேட்சை வேட்பாளரை ஆதரித்தது. கட்சியின் இம்முடிவை எதிர்த்து, சி.பி.எம். கட்சியின் முக்கிய பிரமுகரான விசுவநாத மேனன், அதிருப்தி வேட்பாளராக இத்தேர்தலில் போட்டியிட்டுள்ளார்.

விசுவநாத மேனன், 1987-லிருந்து 1991 வரை சி.பி.எம். முதல்வர் நாயனார் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்தவர். ஐந்தாண்டுகளுக்கு முன்பு பாலக்காட்டில் நடந்த கட்சி மாநாட்டில் இவர் கட்சியிலிருந்தே நீக்கப்பட்டு, சிறிது காலத்துக்கு முன்னர் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ''சோனியாவைப் பிரதமராக்க சி.பி.எம். கட்சி காங்கிரசை ஆதரிக்கிறது. இம்முடிவு துரோகத்தனமானது; மக்களுக்கு எதிரானது. கட்சியின் முடிவை எதிர்த்து, கட்சியிலுள்ள அதிருப்தியாளர்களின் ஆதரவுடன் நான் தேர்தலில் போட்டியிடுவதை யாராலும் தடுக்க முடியாது'' என்கிறார் அவர். விசுவநாத மேனன் தேர்தலில் போட்டியிடுவதைக் கண்டு பீதியடைந்த சி.பி.எம். மாநிலச் செயலாளரான பினாரயி விஜயன், சமரசத்துக்குத் தூதர்களை அனுப்பியும் பலனளிக்காமல் போய்விட்டது. அதிருப்தியாளர்களின் 'கலக'த்தைக் கண்டு அரண்டு போய் நிற்கிறது, சி.பி.எம். தலைமை.



சி.பி.எம். கட்சிக்கு எதிராகக் கலகக்கொடி: அதிருப்தி வேட்பாளராகப் போட்டியிட்ட விசுவநாத மேனன்.

கேரளத்தில் சி.பி.எம். செயலாளர் விஜயன் குழுவுக்கும் பழம்பெருச்சாளி அச்சுதானந்தன் குழுவுக்குமிடையே நடக்கும் பதவிப் போட்டி - அதிகாரச் சண்டையானது நாய்ச்சண்டையாக முற்றியதால், இரு தரப்பையும் சமரசப்படுத்த, இரு தரப்பிலும் பல முக்கியத் தலைவர்களை அகில இந்திய கட்சித் தலைமை நீக்கியது. ஆனால், இவர்களோ, தனிக் குழுவாகத் திரண்டு கலகம் செய்து வருகின்றனர்.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சி.ஐ.டி.யு.வின் அகில இந்தியச் செயலாளரான செரியன், கொச்சி தொழிற்பேட்டை பகுதியில் தொழிற்சங்கத் தேர்தல்களில் வெற்றிபெற்று, சி.பி.எம். கட்சித் தலைமையின் முகத்தில் கரி பூசினார். கட்சி அதிருப்தியாளர்களைத் திரட்டிக் கொண்டு கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தி மக்களிடம் தனக்குள்ள செல்வாக்கைக் காட்டி சி.பி.எம். கட்சியினரைப் பீதியூட்டுகிறார். ''சி.பி.எம். கட்சி சீரழிந்து விட்டது; உண்மையான தொழிலாளி வர்க்கக் கட்சியை விரைவில் நாங்கள் உருவாக்குவோம்'' என்று சவால் விடுகிறார்.

அதிருப்தி குழுவைச் சேர்ந்த மற்றொரு சி.பி.எம். பிரமுகரான சுதீஷ், கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு, ''சி.பி.எம். தலைமையிலான இடது முன்னணி அரசு உலக வங்கி மற்றும் சி.ஐ.ஏ.வின் கைக்கூலியாகவே செயல்பட்டது'' என்று இப்போது குற்றம் சாட்டுகிறார். இவரை, சி.பி.எம். கட்சியின் வார இதழான ''தேசாபிமானி''யின் ஆசிரியரான விஜயன் ஆதரிக்கிறார். இருப்பினும், விஜயன் சி.பி.எம். கட்சியிலிருந்து இன்னமும் நீக்கப்படவில்லை.

இப்போது இந்த அதிருப்தியாளர்கள் அனைவரும் சி.பி.எம். கட்சியின் அதிருப்தி வேட்பாளரான விசுவநாத மேனனை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்துள்ளனர். இக்'கலக'க்காரர்களுக்கு இந்துவெறி பா.ஜ.க.வும் தனது மறைமுக ஆதரவைத் தெரிவித்துள்ளது. கேரளத்தின் காங்கிரசு முதல்வர் அந்தோணிக்கும் முன்னாள் காங்கிரசு முதல்வர் கருணாகரனுக்குமிடையே கழுத்தறுப்பு - பதவிச் சண்டை தொடர்வதால், அந்தோணி நிறுத்தியுள்ள வேட்பாளர் எம்.ஒ.ஜானை வீழ்த்த, கருணாகரன் குழுவினர் விசுவநாத மேனனை மறைமுகமாக ஆதரிக்கின்றனர்.

இத்தேர்தலில் விசுவநாத மேனன் வெற்றி பெறுகிறாரோ இல்லையோ, சி.பி.எம். கட்சியில் புழுத்து நாறும் குழுச்சண்டையும் அதிருப்தியாளர்களின் கலகமும் நாடெங்கும் அம்பலமாகத் தொடங்கிவிட்டது.

## எதிர்ப்புரட்சி பயங்கரவாதக் கோட்டையாக இந்திய அரசு

பாலஸ்தீன மக்களைக் கொன்று குவித்து வரும் இனவெறி பிடித்த இசுரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அண்மையில் இந்தியாவுக்கு வருகை தந்தபோது, அப்பயங்கரவாதிக்கு உணர்வுபூர்வமாக வரவேற்பளித்த இந்துவெறி ஆட்சியாளர்கள், இந்திய - இசுரேலிய கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இந்தக் கூட்டறிக்கையில் பாலஸ்தீனம் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை.

ஷரோனுக்கு அளிக்கப்பட்ட விருந்தின்போது, பிரதமர் வாஜ்பாய் ஆற்றிய உரையில் பாலஸ்தீன மக்களின் நியாயமான போராட்டம் பற்றியோ, இனவெறி பிடித்த இசுரேலின் அடக்குமுறை பற்றியோ மருந்துக்குக் கூட குறிப்பிடவில்லை. ஐ.நா. மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள - தமது சொந்த நாட்டை நிலைநிறுத்த பாலஸ்தீன மக்களுக்கு உள்ள உரிமை பற்றி கூட எதுவுமே குறிப்பிடவில்லை. மாறாக, மேற்காசிய - மத்திய ஆசிய வட்டகையில் நிலவும் வன்முறை நிறுத்தப்பட வேண்டும் என்று மட்டுமே அவர் அங்கலாய்த்தார். இதன்மூலம் ஒடுக்கும் இனவெறி இசுரேலிய பயங்கரவாதிகளையும் தமது உரிமைக்காகப் போராடும் பாலஸ்தீன மக்களையும் சமநிலையில் வைத்துள்ளார். இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்து, கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்டு சுதந்திரமான அரசை நிறுவிக் கொள்ள விழையும் பாலஸ்தீன மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரித்து வந்த இந்திய அரசின் கடந்தகால கொள்கைக்கு நேர் எதிரான கொள்கையையே இப்போது இந்துவெறி அரசு வெளிப்படுத்தியுள்ளது. இது, பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் முதுகில் குத்தும் அப்பட்டமான துரோகச் செயலாகும்.



படிப்பகம்

www.padippakam.com



குஜராத்தில் இந்துவெறியர்கள் நடத்திய பயங்கரவாத வெறியாட்டத்தை அமெரிக்க, இசுரேல் அரசுகள் வாய ளவில் கூடக் கண்டிக்காமல் அங்கீகரித்தன. அதற்குக் கைமா றாக, இப்போது இசுரேலின் இனவெறி பயங்கரவாதத்துக்கு மறைமுகமாக அங்கீகாரமளிக்கவும் இந்துவெறி அரசு துணிந்துவிட்டது. அமெரிக்க - இசுரேல் - இந்தியா எனும் முக்கூட்டை நிறுவி பயங்கரவாதத்தை முறியடிக்கப் போவ தாகவும் இந்திய அரசு அறிவித்துள்ளது. பயங்கரவாத அமெ ரிக்காவின் விசுவாச அடியாளாகவும், பயங்கரவாத இசு ரேலின் கூட்டாளியாகவும், தெற்காசிய வட்டகையில் எதிர்ப் புரட்சி பயங்கரவாத கோட்டையாகவும் இந்தியா மாறிவிட் டதைத்தான் இது மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

## பயங்கரவாதத் தாக்குதலும் மறைக்கப்பட்ட உண்மைகளும்

குஜராத் தலைநகர் அகமதாபாத்தின் காந்தி நகரிலுள்ள அக்ஷர்தம் - சுவாமி நாராயண் கோயில் மீது கடந்த ஆண்டு செப்டம்பர் 24-ஆம் தேதியன்று நடந்த பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது யார்? தீவிரவாதிகளுக்கு உதவியது யார்? - ''இவர்கள் தான்'' என்று காந்தி நகரைச் சேர்ந்த 5 முசு லீம்களைக் கைது செய்து வதைக்கிறது குஜராத் போலீசு. ''இல்லையில்லை; இவர்தான் தீவிரவாதிகளின் கூட்டாளி'' என்று கார் மெக்கானிக் ஒருவரைக் கைது செய்து வதைக்கி றது காசுமீர் போலீசு.

இது முசுலீம் அடிப்படைவாத அமைப்பினரின் திட்ட மிட்ட சதி; சவூதி அரேபியாவிலுள்ள இசுலாமியத் தீவிரவாத அமைப்பினருடன் உள்ளூர் முசுலீம்கள் கூட்டுச் சேர்ந்து இத்தாக்குதலை நடத்தியுள்ளனர், என்கிறது குஜராத் போலீசு.

இது திட்டமிட்ட சதியல்ல; வெளிநாட்டு அமைப்பு களுடன் இதற்குத் தொடர்பு இல்லை. உள்ளூர் முசுலீம்கள் இதில் சம்பந்தப்படவுமில்லை. காசுமீரின் அனந்த்நாக் நகரைச் சேர்ந்த ஒரு கார் மெக்கானிக்குடன் இரண்டு லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் குஜராத்துக்கு வந்து இத்திடீர் தாக்குதலை நடத்தினர், என்கிறது காசுமீர் போலீசு.

இத்தீவிரவாதிகள் குஜராத் தலைநகரில் ஒரு வார காலம் தங்கியிருந்து, உள்ளூர் முசுலீம்க ளுடன் சேர்ந்து நன்கு திட்டமிட்டு இத்தாக்கு தலை நடத்தியுள்ளனர்; பெரிய கோயில்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத் முத லான இந்த அமைப்பு களின் அலுவலகங்க ளுக்கும் குறி வைத்தனர், என்கிறது குஜராத் போலீசு.

இத்தீவிரவாதிகள் அகமதாபாத்தில் ஒருநாள் மட்டுமே தங்கி யள்ளனர்; திட்டமிட்ட சதி ஏதுமின்றி அவர்கள் திடீர் முடிவு செய்து இக்கோயில் மீது தாக்குதல் நடத்தியுள் ளனர்; முதல்வர் மோடி தனது 'கௌரவ' யாத்திரையின் போது இக்கோயிலுக்கு வருவார் என்று தவறாகக் கணக் கிட்டு விட்டனர், என்கிறது காசுமீர் போலீசு.

சுவாமி நாராயண் கோயில் தாக்குதலின் போது கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் சட்டைப் பையிலிருந்த கடி தத்தை எழுதியவர் இவர்தான் என்று அகமதாபாத்தின் முசுலீம் மத குருவான முப்தி அப்துல் கியாசூம் மன்சூரி என்பவர் மீது பயங்கரவாதக் குற்றம் சாட்டி குஜராத் போலீசு வதைக்கிறது.

இந்தக் கையெழுத்து மோசடியானது; குற்றம் சாட்டப்பட் டுள்ளவரை மிரட்டி எழுத வைத்த கடிதம் இது; தடய அறி வியல் சோதனையில் இம்மோசடி அம்பலமாகியுள்ளது என்று காசுமீர் போலீசு கூறுகிறது.

எந்த போலீசார் கூறுவது உண்மை என்பதைக் கண்ட றியும் பொருட்டு ஒரு விசாரணை நடத்தப்பட்டது. குஜராத் போலீசார் சார்பில், அகமதாபாத் துணை போலீசு கமிஷனர் தனது குழுவுடன் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் முக்கி யமான மூன்று முசுலீம்களுடன் காசுமீருக்குச் சென்றார். அங்கு காசுமீர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ள உஸ்மான்கான் என்ற கார் மெக்கானிக்கிடம், குற்றஞ்சாட்டப் பட்டுள்ள குஜராத் முசுலீம்களை முன்னிறுத்தி விசாரணை செய்யப்பட்டது. போலீசு இன்ஸ்பெக்டர் ஜெனரல், மையப் புலனாய்வுத் துறை, ''ரா'' உளவு நிறுவன அதிகாரிகள், எல்லைப் பாதுகாப்புப் படையின் உளவுப் பிரிவான ''ஜி'' பிராஞ்ச் இராணுவ அதிகாரிகள் முன்னிலையில் நடந்த இந்த விசாரணையில், குஜராத் முசுலீம்களுக்கும் காசுமீரின் உஸ்மான் கானுக்கும் தொடர்பு இல்லை என்று நிரூபணமா யிற்று. இருப்பினும் குஜராத் போலீசார் உள்ளூர் முசுலீம் களின் ஆதரவோடுதான் இத்தாக்குதல் நடந்துள்ளது என்று புதிய ஆதாரங்களை அவிழ்த்து விடுகின்றனர். காசுமீர் போலீசாரோ, தமது தரப்புதான் உண்மையானது என்று ஆதா ரங்களை அடுக்குகின்றனர்.

எந்த போலீசார் கூறுவது உண்மை? என்று பத்திரிகைகள் கேள்வி எழுப்பி இந்த லாவணிக்குச் சூடேற்றுகின்றன. ஆனால், மறைக்கப்பட்ட மற்றொரு உண்மை இருக்கிறது. எங்காவது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் நடந்தால், உடனே அதன் பின்னே மிகப்பெரிய சதி உள்ளதாக வழக்கை சோடிப்பது; அப்பாவி முசுலீம்களைப் பிடித்துச் சிறையிலடைத்து வதைத்துப் பயங்கரவாதக் குற்றம் சாட்டுவது; இதற்காகப் பொய்சாட்சிகளை உருவாக்கி உருட்டி மிரட்டுவது - என்று போலீசின் பாசிச பயங்கரவாதம் இப்போது நாடெங்கும் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டது என்கிற உண்மைதான் அது! ●

''அகமதாபாத் சுவாமி நாராயண் கோயிலில் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளின் கூட்டாளி இவர்தான்!''
- காசுமீர் போலீசின் புதுக்கதை.





படிப்பகம்

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## கிரிமினல்களின் கூட்டாளியாக சென்னை போலீசு

சென்னை மாநகர எல்லைக்குள் பணியாற்றும் போலீசாருக்கும், சமூக விரோத கிரிமினல் கும்பல்களுக்கும் இடையே உள்ள நெருக்கம் பற்றி சமீபத்தில் இரகசிய ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், தலைமைக் காவலர்கள் மட்டத்தில் 102 பேருக்கும்; ஆய்வாளர்கள், அதற்கு மேலுள்ள அதிகாரிகள் மட்டத்தில் 85 சதவீத அதிகாரிகளுக்கும் கிரிமினல் கும்பல்களோடு நெருங்கிய தொடர்பு இருப்பது ஆதாரங்களோடு அம்பலமாகியுள்ளது. இதைப் படித்துவிட்டு சென்னை மாநகர போலீசு ஆணையர் விஜயகுமார் அதிர்ச்சியடைந்து விட்டாராம். நமக்கும் அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. 15 சதவீத போலீசு அதிகாரிகளுக்கு கிரிமினல்களோடு தொடர்பு இல்லை என்பதைப் படிக்கும் பொழுது!

## இதுதாண்டா அமெரிக்க ஜனநாயகம்



அமெரிக்க அரசால் தண்டிக்கப்பட்ட மூன்று கன்னியாஸ்திரிகளுள் ஒருவரான ஜாக்கி ஹட்சன்.

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததற்காக, அமெரிக்காவின் அமைதி இயக்கத்தைச் சேர்ந்த மூன்று கன்னியாஸ்திரிகளுக்கு மூன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. கொலோராடோ நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, இந்த மூன்று கன்னியாஸ்திரிகளும் தங்களின் இரத்தத்தால் ஒரு ஏவுகணையின் மீது சிலுவையை வரைந்து, போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இது நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் செயல் எனக் குற்றஞ்சுமத்தி, அம்மூன்று கன்னியாஸ்திரிகளுக்கும் சிறை தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இக்குற்றத்திற்கு 60 ஆண்டுகள் வரை தண்டனை அளிக்க முடியும் என்று நீதிமன்றம் மிரட்டியும் இருக்கிறது.

## தலைவர்களின் உயிர் வெல்லக் கட்டியா?

நிதிப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை என மூச்சுக்கு முன்னூறு தடவை புலம்பும் ஆட்சியாளர்கள், 'குடியரசு'த் தலைவர், பிரதமர் உள்ளிட்ட சில மிகமிக முக்கிய நபர்களின் பாதுகாப்பிற்காக 720 கோடி ரூபாயை அள்ளி விடத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்த மிகமிக முக்கிய நபர்கள் ஊர் சுற்றி வர, தற்பொழுது ''ஆவ்ரோ'' என்ற வகை விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தீவிரவாத அபாயத்தைக் காட்டி இந்த விமானங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, இதற்குப் பதிலாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் பயன்படுத்துவதைப் போன்ற ''ஜெட்'' விமானம் வாங்க முடிவு எடுத்து கஜானாவையும் திறந்து விட்டது, மைய அரசு.

## பெப்சி - கோக் எதிர்ப்பில் சி.பி.எம்.இன் இரட்டை வேடம்

''நாங்கள் கோக் - பெப்சியைப் புறக்கணிக்கவில்லை; அவர்கள்தான் எங்களைப் புறக்கணிக்கிறார்கள். அந்த நிறுவனங்கள் எங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்வதே இல்லை'' - இப்படி புலம்பியிருப்பது யார் தெரியுமா? பன்னாட்டு நிறுவனங்களை எதிர்ப்பதாகக் கூறும் சி.பி.எம். கட்சியின் வங்க மொழி நாளேடான ''ஜனசக்தி''. கோக் - பெப்சி பானங்களை எதிர்த்து நாடெங்கும் பரவலாக போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தபொழுது, இப்படி புலம்பிய ஜனசக்தியின் விளம்பர மேலாளர், ''கோலா விளம்பரங்களை எங்கள் பத்திரிகையில் போடுவதா, கூடாதா என்பது பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை'' என்றும் வெட்கமின்றிக் கூறினார். நாய் விற்ற காசு குரைக்கவா செய்யும்?

## அமெரிக்காவின் இன்னொரு முகம்

அமெரிக்காவில் ஆண்டுக்கு ஆண்டு ஏழ்மையும், வறுமையும் அதிகரித்துக் கொண்டே போவதை, அமெரிக்க அரசினால் கூட மறைக்க முடியவில்லை. அமெரிக்காவின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அந்நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 2001-ம் ஆண்டில் மூன்று கோடியே முப்பத்து நான்கு இலட்சமாக இருந்தது. இந்த எண்ணிக்கை அடுத்த ஆண்டிலேயே 2002-இல் மூன்று கோடியே நாற்பத்தெட்டு இலட்சமாக உயர்ந்து விட்டது. ஒருவேளை சோற்றுக்கு வழியில்லாமல் தவிக்கும் அமெரிக்க மக்களில், ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு - அதாவது, ஒரு கோடியே இருபத்திரெண்டு இலட்சம் பேர் குழந்தைகள்.

## ஆரம்பப் பள்ளிக்கு வக்கில்லை 'பல்கலைக் கழகத்திற்கு'க் குறைவில்லை

ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத் நகரில் ''சில்வன் வெர்னிங் சிஸ்டம்'' என்ற அமெரிக்க நிறுவனம் 'பல்கலைக்கழகமொன்றை' நடத்தி வருகிறது. உண்மை என்னவென்றால், 'இப்பல்கலைக் கழகத்திற்கு' இதுநாள் வரை பல்கலைக்கழக மானியக் குழு அங்கீகாரம் அளிக்கவில்லை. அதாவது, இது ஒரு சட்டவிரோத, மோசடிப் பல்கலைக்கழகம். மிகவும் பின்தங்கிய மாநிலமான சட்டீஸ்கரில் மட்டும், இது போன்ற 49 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. மூட்டைப் பூச்சி போல பெருத்துவரும் தனியார் பல்கலைக்கழகங்களுள் பெரும்பாலானவை மோசடியானவை எனப் பல்கலைக்கழக மானியக் குழு எச்சரிக்கை செய்யும் அளவிற்கு கல்வியில் தனியார் மயம் புகுந்து விளையாடி வருகிறது.


இந்த மாட்டுக் கொட்டகைக்குப் பெயர் ராய் பல்கலைக்கழகமாம்!



Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

# இது தான் இன்றைய இந்தியா



உங்களால் ஒரேயொரு நாள் தெருவோரத்தில் உள்ள நடைபாதையில் குடும்பம் நடத்த முடியுமா? நடைபாதைவாசிகளுக்காக இரக்கப்படுபவர்கள் கூட, இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். ஆனால், இந்தப் படத்தில் நாம் பார்க்கும் பெண்களுக்கு நடைபாதையில் உள்ள இந்த மரத்தடிதான் வீடு. ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல, ஆண்டு முழுவதும் இவர்கள் இந்த திறந்தவெளியில்தான் குடும்பமே நடத்துகிறார்கள். இவர்களைப் போல பல ஆயிரம் குடும்பங்கள் சென்னையில் - நடைபாதையில் வசித்து வருகின்றன.

தார்ச்சாலை போட வேண்டுமா, பள்ளம் தோண்டி தொலைபேசி கேபிள் பதிக்க வேண்டுமா, குடிநீர்க் குழாய் இணைப்புக் கொடுக்க வேண்டுமா, அடுக்குமாடிக் குடியிருப்புகள், வர்த்தக வளாகங்கள் கட்ட வேண்டுமா — இவற்றுக்கெல்லாம் இவர்களின் உழைப்புதான் அச்சாணி. இவர்களின் கூலி உழைப்பு இல்லையென்றால், சென்னை, நகரமாக இயங்க முடியாது. ஆனால், இவர்களின் முகவரியோ, ''நடைபாதை''! நகரத்தின் நன்றியுணர்வை என்னவென்று சொல்லுவது?

வீட்டிற்கும், அலுவலகத்திற்கு இடையே மாறி மாறி ஓடிக் கொண்டிருக்கும் சென்னை நகரின் 'பரபரப்பான' வாழ்க்கையில், சிறிது நேரம் ஒதுக்கி அவர்களோடு பேசிப் பாருங்கள். கிராமத்து விவசாயி, நகர்ப்புறத்துக் கூலியாய், நடைபாதைவாசியாய் மாறிப் போன அவலம் புரிய வரும். ஒன்று தெரியுமா, கிராமத்தில் இருந்து நகரத்திற்கு பஞ்சம் பிழைக்க வரும் ''பொருளாதார அகதிகளின்'' எண்ணிக்கையில், இந்தியாவிலேயே தமிழகம்தான் முதல் மாநிலம்!




உலக வங்கியின் இந்தியக் கிளை அலுவலகம் சென்னை நகரில் பொருளாதார அறிஞர்கள் சிலரைக் கூட்டி, வறுமையை ஒழிப்பது பற்றி நடத்திய கருத்தரங்கம்தான் இந்தப் படம். தாராளமயத்தின் பின்னர்தான், இந்தியாவெங்கும் வறுமையும், வேலை வாய்ப்பின்மையும், விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளும் முன்னைவிடப் பன்மடங்கு பெருகின. ஆனால், இந்தப் பொருளாதார அறிஞர்களோ, தாராளமயத்தை இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்தினால், எல்லாம் சரியாகிவிடும் என்கிறார்கள். ஆலகால விஷத்தை ஒரு துளி சாப்பிட்டாலும் மரணம்தான்; ஒரு டம்ளர் குடித்தாலும் மரணம்தான். அறிஞர்களோ, ஒரு டம்ளர் குடித்துப் பார்; சொர்க்கம் கீழே வந்து விடும் என்கிறார்கள்.

தாராளமயத்தால் நடுத்தெருவுக்குத் துரத்தப்பட்ட உழைக்கும் மக்கள் ஒருபுறம்; நகரத்தை அழகுபடுத்த நடைபாதையில் வசிக்கும் கூலிக் குடும்பங்களைத் துரத்த வேண்டும் என உத்தரவு போட்ட உலக வங்கி நடத்தும் வறுமை ஒழிப்பு கருத்தரங்கம் மறுபுறம். நரி நாட்டாமை செய்தால் கிடைக்கு இரண்டு ஆடல்லவா கேட்கும்?